امام حسین کی کرامات



# இமாம் ஹுஸைன் رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்களின் அதிசயங்கள்

(TAMIL)


ஷைகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத்,
த'வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,
அல்லாமா, மௌலானா அபூ பிலால்

**முஹம்மத் இல்யாஸ்**

அத்தார் காதிரீ ரஜவீ دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه

# இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُ அவர்களின் அதிசயங்கள்

இந்த சிறு நூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், த∴வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி** دَامَتۡ بَرَکَاتُہُمُ الۡعَالِیَہ அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்ட தாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக் கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழி பெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**குறிப்பு** :- இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹன∴பி மத்ஹபின்படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**Translation Majlis (Dawat-e-Islami)**

Alami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran, Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**Phone:** ☎ +92-21-34921389 to 91

**Email:** 🖃 translation@dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ط بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ط

## புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும் போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنْ شَآءَ اللّٰه عَزَّوَجَلَّ வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ
عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَام

**யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!**

(المستطرف، ج ١، ص ٤٠، دارالفكر، بيروت)

**(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்)**

# பொருளடக்கம்

புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ ........................................... ii

## இமாம் ஹுஸைன் அவர்களின் அதிசயங்கள் .... 1

ஸலவாத்தின் மகத்துவம் ............................................................ 1
அதிசயமான பிறப்பு ...................................................................... 2
ஒளி வீசும் திருமுகத் தோற்றம் .................................................. 3
கிணற்று நீர் பொங்கி எழுந்தது ................................................... 3
புனிதத்துவத்தை மதியாப் பாவியை குதிரை தீயினுள் வீசியது ....... 4
கருந்தேள் கொட்டியது .................................................................. 6
புனிதத்துவத்தை மதியாப்பாவி தாகத்தால் செத்தொழிந்தான் ..... 7
அதிசயங்கள் மன்னிப்புக்கு எந்த இடத்தையும் மீதி வைக்கவில்லை ................................................................................. 8
ஒளியுடைய தூணும் வெண்ணிறப் பறவையும் .............................. 10
கௌலி பின் யzஸீதின் திகிலூட்டும் முடிவு .................................. 11
ஈட்டியின் நுனியில் பரிசுத்தக் குர்ஆனின் ஓதல் ........................... 13
இரத்தத்தால் எழுதப்பட்ட கவிதை வரிகள் .................................. 16
ஒளி பொருந்திய சிரசின் அற்புதத்தால் பாதிரி இஸ்லாத்தைத் தழுவினார் ...................................................................................... 17
திர்ஹம்களும் தீனார்களும் சிறு கற்களாயின ............................ 18
ஒளி பொருந்திய சிரசு எங்கே நல்லடக்கம் செய்யப்பட்டது ......... 20

ஒளி பொருந்திய சிரசை ஸியாரத் செய்தல் ........................................ 22
ஒளி பொருந்திய சிரசிடமிருந்து ஸலாமுக்கு பதில்........................ 24
ஒளி பொருந்திய சிரசின் அதிசயமிக்க பரகத் ................................ 25
கொட்டும் அந்தப் பூச்சிகள் தொடர்பான விபரங்கள் ................. 26
முபாரக்கான சிரசின் ஒளிப் பிரகாசம் ........................................ 28
மாநபியினுடைய மகிழ்வின் இரகசியம்......................................... 29
பல்வேறு மஷாஹிதுகளுக்கு விளக்கம் ........................................ 30
மன்னிப்பை விட்டும் நம்பிக்கையிழந்த திகிலூட்டும் சம்பவம்..... 31
புகழ், செல்வத்தின் மீது பேராசை ............................................... 38
யzஸீதின் பயங்கர முடிவு ............................................................ 39
இப்னு zஸியாதின் பயங்கர முடிவு................................................ 41
இப்னு zஸியாதின் மூக்கினுள் பாம்பு............................................ 41
தீயச் செயல்கள் தீய முடிவுகளையே கொடுக்கும்........................ 43
முக்தார் தனக்கு நபித்துவம் இருப்பதாக பிதற்றிக் கொண்டார்.. 44
அல்லாஹ்வின் மறைமுக திட்டங்கள் குறித்து அச்சம் கொள்ள
வேண்டும் ...................................................................................... 47
ஆஷூராவின் சிறப்புக்கள் .............................................................. 49
“كربلا” என்பதிலுள்ள ஐந்து எழுத்துக்களின் தொடர்பில் முஹர்ரம்,
ஆஷூரா நோன்புகளின் 5 சிறப்புக்கள் .......................................... 51
ஆஷூராவின் நோன்பு.......................................................... 52
யூதர்களுக்கு மாற்றம் செய்யுங்கள் ..................................... 52
முழு வருடமும் கண் வலியோ, நோயோ ஏற்படாது ........... 53

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهُ அவர்களின் அதிசயங்கள்

ஷைத்தான் உங்களுக்கு எவ்வளவு சோம்பலை உண்டாக்கினாலும், நற்கூலியைப் பெறும் நல்லெண்ணத்துடன் இச்சிறுநூலை ஆரம்பம் முதல் கடைசி வரை வாசியுங்கள். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ உங்களுக்கு அஹ்லுல் Bபைத்துக்களின் மீது நன்மதிப்பு ஏற்படும்.

## ஸலவாத்தின் மகத்துவம்

மக்கத்து மாமன்னர், மதீனத்து மாவேந்தர் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியுள்ளார்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ வியாழக்கிழமை தினத்தில், வெள்ளியாலான கடதாசிகளையும் தங்கத்தாலான பேனாக்களையும் கொண்ட மலக்குமார்களை அனுப்பி வைக்கிறான். அவர்கள் வியாழக்கிழமை பகல் காலத்தின் போதும், வெள்ளிக் கிழமைக்கு முந்திய இரவு அதாவது வியாழன் இரவின் போதும் யார் யாரெல்லாம் அதிகமாக ஸலவாத் ஓதுகின்றார்களோ அவர்களின் பெயர்களை எழுதிக் கொள்வார்கள். (கன்Zஸீல் உம்மால், பாகம் 1, பக்கம் 250, ஹதீஸ் 2174)

صَلُّوْا عَلَى الْحَبِيْب      صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## அதிசயமான பிறப்பு

முஸ்த.∴பா صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் திருப்பேரர், ஹழ்ரத் ஸய்யிதுனா அலீ رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களதும், ஸய்யிததுனா ∴பாத்திமா رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهَا அவர்களதும் உன்னதமான திருமகனார், ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் அற்புதம் மிக்கவர்கள். அவர்களுடைய அருள் மிகுந்த பிறப்பும் கூட அதிசயமானது. ஹழ்ரத் ஸய்யிதி நூருத்தீன் அப்துர் ரஹ்மான் ஜாமி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ஷவாஹிதுந் நுபுவ்வாவில் அறிவித்துள்ளார்கள், ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள், ஹிஜ்ரி 4, ஷ.∴பான் மாதத்தின் 4ஆம் பிறை செவ்வாய்க்கிழமை மதீனா முனவ்வராவில் பிறந்தார்கள். ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் தாயின் கருவறையில் ஆறு மாதங்கள் மாத்திரமே இருந்தார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்கள் கருவறையிலிருந்து, பின்பு பிறந்தவர்களில் ஹழ்ரத் ஸய்யிதுனா யஹ்யா عَلَيْهِ السَّلَام அவர்களையும், ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களையும் தவிர வேறு எவரும் உயிர் வாழ்ந்ததில்லை. (ஷவாஹிதுந் நுபுவ்வா, பக்கம் 228, மக்தபதுல் ஹகீகா, துர்கி)

وَاللّٰهُ تَعَالٰی اَعْلَمُ وَرَسُوْلُهٗ اَعْلَم عَزَّوَجَلَّ وَ صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## ஒளி வீசும் திருமுகத் தோற்றம்

ஹழ்ரத் அல்லாமா ஜாமி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் மேலும் குறிப்பிடுகிறார்கள்: ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهُ அவர்கள் இருளான இடத்தில் இருக்கும் போது அவர்களின் அருள்பொழியும் நெற்றியிலிருந்தும், கன்னங்களிலிருந்தும் பிரகாசிக்கும் ஒளிக்கதிர்களால் சுற்றுப்புறச் சூழலெல்லாம் ஒளிப்பெற்று இலங்கத் தொடங்கிவிடும். (மீண்டும், பக்கம் 228)

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கிணற்று நீர் பொங்கி எழுந்தது

ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهُ அவர்கள் மதீனா முனவ்வராவிலிருந்து மக்கா முகர்ரமாவுக்கு زَادَهُمَا اللّٰهُ شَرَفًا وَّتَعْظِيْمًا பயணித்துக் கொண்டிருந்த போது, வழியில் ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு முதீ.: رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْه அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் எனது கிணற்றில் தண்ணீர் மிகக்குறைவாக உள்ளது, பரகத் ஏற்பட தாங்கள் துஆ செய்ய வேண்டும் எனக்கூறினார்கள், ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهُ அவர்கள் அந்த கிணற்றின் நீரை கொண்டு வரச் சொன்னார்கள். வாளியில் நீர் கொண்டு வரப்பட்டதும், அவர்கள் அதில் வாயை வைத்து கொஞ்சம் நீரை குடித்து பின்பு அதிலே கொப்பளித்தார்கள். பிறகு அந்த வாளியை மீண்டும் அக்கிணற்றினுள் போட்டார்கள். கிணற்று நீர் போதுமான அளவு பொங்கி எழுந்ததோடு,

முன்னரை விட இனிமையாகவும் சுவையாகவும் ஆகி விட்டது. (அத்தBபகாதுல் குப்ரா, பாகம் 5, பக்கம் 110, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

صَلُّوْا عَلَى الْحَبِيْب    صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## புனிதத்துவத்தை மதியாப் பாவியை குதிரை தீயினுள் வீசியது

ஹிஜ்ரி 61 முஹர்ரம் மாதம் 10ம் பிறை அதாவது ஆஷூரா தினம் வெள்ளிக்கிழமை, பேரரசர் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் கர்பலா யுத்தக் களத்தில் யZஸீதி படையினர்களுக்கு, அவர்களின் பக்கத்திலிருந்து மன்னிப்புக்கு எந்த இடமும் கொடுக்கப் படமாட்டாது என ஒரு குத்பா பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அப்போது இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களுடைய கா∴பிலாவில், முகாமிட்டு மனந்தளர்ந்து போயிருந்த பயணிகளைக் காப்பதற்காக அகழியில் போடப்பட்டிருந்த நெருப்பை பார்த்து ஒரு யZஸீதி (மாலிக் பின் உர்வாஹ்) ஹுஸைனே رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அங்குள்ள நெருப்புக்கு முன்னரே நீர் இங்கு நெருப்பை மூட்டி விட்டீர் என்று கூறினான். ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் كَذَبْتَ يَا عَدُوَّ اللهِ அதாவது “அல்லாஹ்வின் எதிரியே! நீ ஒரு பொய்யன், நான் நரகத்துக்குத்தான் செல்வேன் என்று நீ

எண்ணுகிறாயா?'' என்று கேட்டார்கள். பின்பு இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்களின் கூட்டத்தில் இருந்த ஒரு வாலிபர் ஹழ்ரத் ஸய்யிதுனா முஸ்லிம் பின் அவ்ஸஜா رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்கள் இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்களிடம் அந்த யஸீதியின் முகத்துக்கு ஓர் அம்பை எய்வதற்கு அனுமதி கேட்டார்கள். ஆனால் இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்கள் நமது புறத்திலிருந்து தாக்குதல் ஆரம்பித்து விடக்கூடாது என்பதற்காக அனுமதி வழங்க வில்லை. பின்பு இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்கள் தம் கரங்களைப் பிரார்த்தனைக்காக ஏந்தியவர்களாக: "யா அல்லாஹ் عَزَّوَجَلَّ இக்கொடியவனை நரக நெருப்பில் வேதனைப்படுத்துவதற்கு முன்னால் இவ்வுலக நெருப்பின் தண்டனையில் துன்பமடையச் செய்வாயாக'' என்று துஆ செய்தார்கள். உடனடியாக அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த யஸீதியின் குதிரை தனது காலை பூமியின் ஒரு குழியில் வைத்து விட்டதால் திடீரெனக் குழுங்கியது. புனிதத்துவத்தை மதியாப்பாவி யஸீதி குதிரையிலிருந்து கீழே விழுந்தான். அவனது கால் குதிரை ஏறும் படித்தட்டில் சிக்கிக் கொண்டது. குதிரை அவனை இழுத்துக் கொண்டு ஓடிச் சென்று அக்கினியால் நிறைந்த அகழியில் வீசி எறிந்தது. பாக்கியமற்ற துரதிஷ்டசாலியான அந்த யஸீதி நெருப்பில் கருகி மாண்டான். ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ ஸஜ்தா ஷுக்ர் (அல்லாஹ்வின் சந்நிதானத்தில் நன்றி

தெரிவித்து செய்யும் ஸஜ்தா) செய்து விட்டு, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ உனது நேசராம் நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பரிசுத்தக் குடும்பத்தைப் பழித்தவனை தண்டித்தமைக்கு உனக்கு நன்றி தெரிவிக்கிறேன் என்றுக் கூறினார்கள். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 88)

**பரிசுத்த அஹ்லுல் பைத்துக்களை மரியாதை செய்யாதவர்களே இறைவனின் சாபம் உண்டாகுக அஹ்லுல் பைத்துக்களின் விரோதிகளே**

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கருந்தேள் கொட்டியது

புனிதத்துவத்தை மதியாப்பாவி யZஸீதிக்கு அக்கணமே ஏற்பட்ட அந்தப் பயங்கரமான முடிவைக் கண்ணால் கண்டும், படிப்பினை பெறுவதற்குப் பதிலாக இதை ஒரு சாதாரண விடயமாக கருதி இன்னுமொரு பயமற்ற யZஸீதி ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களைப் பார்த்து உங்களுக்கு ரசூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களோடு என்ன உறவு என்று கேட்டான்? இதைக் கேட்டவுடன் ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களின் உள்ளம் நோவினை அடைந்து அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம், "யாஅல்லாஹ் عَزَّوَجَلَّ இந்த முரடனுக்கு தண்டனை வழங்குவாயாக" என்று மன்றாடினார்கள். அந்த துஆவின் பிரதிபலன் உடனே வெளியாகியது அதாவது அந்த யZஸீதிக்கு திடீரென மலம் கழிக்கும் தேவை ஏற்பட்டு,

குதிரையை விட்டும் இறங்கி ஒதுக்குப் புறமான ஓர் இடத்தை நோக்கி ஓடி ஆடைகளைக் களைந்து குந்தினான். திடீரென ஒரு கருந்தேள் அவனைக் கொட்டியது. தாங்க முடியாத வலியால் அசுத்தத்தின் துர்வாடையோடு அங்குமிங்கும் எல்லோரும் பார்க்க ஓடத் தொடங்கினான். இறுதியாக அவனுடைய படையினர்களுக்கு முன்னால் மிகக் கேவலமான நிலையில் உயிரிழந்தான். ஆனால் வெட்கமற்ற அந்தக் கல்நெஞ்சக்காரர்கள் படிப்பினை பெறாமல் இந்த சம்பவத்தையும் சாதாரணமான விடயமாக கருதினார்கள். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 89)

## புனிதத்துவத்தை மதியாப்பாவி தாகத்தால் செத்தொழிந்தான்

யஸீதி படையின் ஒரு கல்நெஞ்சன் ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللہ تَعَالٰی عَنْہُ அவர்களின் முன்னிலையில் வந்து, அதோ அங்கு ஓடிக் கொண்டிருக்கும் யூப்ரடீஸ் நதியைப் பாருங்கள். இறைவன் மீது ஆணையாக! உங்களுக்கு அதிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடைக்காது, நீங்கள் தாகத்துடனே மரணிப்பீர்கள் என்று சொன்னான். ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللہ تَعَالٰی عَنْہُ அவர்கள் அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம் பிரார்த்தனை செய்தார்கள், اَللّٰھُمَّ اَمِتْهُ عَطْشَانًا அதாவது "யா அல்லாஹ் عَزَّوَجَلَّ இவனை தாகத்துடனே மௌத்தாக்கி விடுவாயாக." இமாம் ஹுஸைன் رَضِیَ اللہ تَعَالٰی عَنْہُ அவர்கள் துஆ செய்தவுடன் அந்தக் குறும்பன் யஸீதியின் குதிரை திகில்

கொண்டு வேகமாக ஓடத் தொடங்கியது. அதை பிடிப்பதற்காக யzஸீதி அதன் பின்னால் ஓடத் தொடங்கினான், அதனால் அவனுக்கு கடும் தாகம் ஏற்பட்டு, اَلْعَطَشْ اَلْعَطَشْ அதாவது தாகிக்கிறது, தாகிக்கிறது என்று கத்தத் தொடங்கினான். ஆனால் தண்ணீரை அவன் வாயருகே கொண்டு செல்லும் போது அதில் ஒரு துளியும் குடிக்க இயலாத நிலை ஏற்பட்டு, அதே நிலையில் அவன் மாண்டொழிந்தான். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 90)

## அதிசயங்கள் மன்னிப்புக்கு எந்த இடத்தையும் மீதி வைக்கவில்லை

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இமாம் ஹுஸைன் رَضِیَ اللہُ تَعَالٰی عَنْہُ அவர்களின் அந்தஸ்து எவ்வளவு மகத்துவமானது என்பதை அவதானித்தீர்களா? சங்கையான இமாம் رَضِیَ اللہُ تَعَالٰی عَنْہُ அவர்களுடன் ஒழுகக்கமற்ற முறையில் நடந்துக்கொள்வது அல்லாஹ் عَزَّوَجَلَّ வுக்கு முற்றிலும் விருப்பமற்ற செயல் என்பதை நாம் அறிந்துக் கொண்டோம். இமாம் ஹுஸைன் رَضِیَ اللہُ تَعَالٰی عَنْہُ அவர்களோடு தவறாக பேசுபவர்கள் ஈருலகிலும் வெறுத்தொதுக்கப்படுவார்கள். கண்ணியமற்று நடந்துக் கொண்டவர்கள் துன்யாவிலும் துன்புறுத்தும் வேதனைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இதில் மாபெரும் படிப்பினை உள்ளது. ஹழ்ரத் அல்லாமா மௌலானா ஸய்யித் முஹம்மத் நஈமுத்தீன் முராதாBபாதி رَحْمَۃُ اللہِ تَعَالٰی عَلَیْہ அவர்கள், கண்ணியமற்ற முறையில் நடந்துக்

கொண்டவர்களின் சில முக்கியமான திகிலூட்டும் சம்பவங்களை கூறிய பிறகு விளங்கப்படுத்துகிறார்கள்: அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் சந்நிதானத்தில் கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பேரர் ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களின் உயர் அந்தஸ்து குறித்தும், மகத்துவம் பற்றியும் ஏராளமான திரு வசனங்களும் புகழ்மிக்க ஹதீஸ்களும் கூறியவை நிரூபிக்கப்பட வேண்டி இருந்தது. அவர்களின் அதிசயங்களும் அற்புதங்களும் கூட அதை நிரூபித்தன. அதிசயங்கள் மன்னிப்புக்கு எந்த இடத்தையும் மீதி வைக்கவில்லை.

இதனால் அவர்களிலிருந்து வெளியாகிய தெய்வீகப் பேரற்புதங்கள் மன்னிப்பு கொடுப்பதற்கு எவ்விடத்தையும் மீதி வைக்கவில்லை என்பதே இதற்கான உண்மைக் காரணம். சற்று சிந்தித்துப் பாருங்கள், யாருடைய துஆ உடனடியாகவும் நிச்சயமாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ, அவரோடு போராடுவது அல்லாஹ் عَزَّوَجَلَّ வோடு போராடுவது போன்றதாகும். இதன் முடிவை நன்றாக சிந்தித்து தவிர்ந்துக் கொள்ளுங்கள்! ஆனால் அத்தீயவர்கள் அந்தப் பகிரங்கமான அற்புதங்களைப் பார்த்தும் கூட படிப்பினை பெறவில்லை. மேலும் இந்த தற்காலிக உலகின் மீது வைத்திருந்த மோகம் அவர்களின் ஆத்மாக்களை ஆட்கொண்டு அவர்களைக் குருடாக்கி விட்டது. (ஸவானிஹே கர்பலா, பக்கம் 90)

## ஒளியுடைய தூணும் வெண்ணிறப் பறவையும்

ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رضی اللہ تعالیٰ عنہ அவர்களின் ஷஹாதத் (உயிர்த் தியாகம்) துக்கு பிறகு, அவர்களின் ஒளி பொருந்திய தலையிலிருந்து ஏராளமான அற்புதங்கள் வெளியாகின. எஞ்சியிருந்த அஹ்லுல் பைத் பயணிகள் முஹர்ரமுல் ஹராம் 11ல் கூஃபாவை வந்தடைந்த போது அவர்களுக்கு முன்னரே கர்பலா உயிர் தியாகிகளின் அருள் மிகுந்த தலைகள் அங்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இமாம் ஹுஸைன் رضی اللہ تعالیٰ عنہ அவர்களின் ஒளி பொருந்திய தலை மாத்திரம் இரக்கமே இல்லாத கேவலமான கொடியவன் "கௌலி பின் யzஸீதிடம்" இருந்தது. அவன் கூஃபாவை இரவு நேரத்தில் வந்தடைந்தான். அப்போது அரச இல்லத்தின் (Governor House) வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்ததால், ஒளி பொருந்திய அந்த தலையை தன் வீட்டுக்கு எடுத்துச் சென்று, மரியாதையின்றி நிலத்திலே வைத்து, பெரிய பாத்திரம் ஒன்றால் மூடினான். பிறகு அவனது மனைவி "நவார்" இடம் சென்று உனக்கு இவ்வுலகின் மிகப் பெரிய செல்வத்தைக் கொண்டு வந்துள்ளேன், ஹழ்ரத் ஹுஸைன் இப்னு அலியின் தலை உன்னுடைய வீட்டில் இருப்பதைப் பார் என்று கூறினான். அவள் பெரும் கோபத்தோடு கூச்சலிட்டாள், அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் சாபம் உன் மீது உண்டாகட்டும். மனிதர் பொன்னையும் வெள்ளியையும்தான் கொண்டு வருவார்கள், நீ நபி பெருமானாரின் பேரக்குழந்தையின் ஒளி பொருந்திய சிரசை கொண்டு

வந்துள்ளாய். அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது ஆணையாக! இதற்குப் பிறகு ஒருபோதும் உன்னோடு வாழ மாட்டேன். இதைக் கூறிவிட்டு அவள் படுக்கையிலிருந்து எழுந்து சென்று ஒளி பொருந்திய அந்த சிரசின் அருகில் அமர்ந்துக் கொண்டாள். அவள் கூறுவதாவது: அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது ஆணையாக! ஓர் ஒளி வானிலிருந்து அந்தப் பாத்திரம் வரை ஒரு தூணைப்போல் இலங்குவதையும் வெண்ணிறப் பறவை அதனைச் சுற்றிப் பறப்பதையும் நான் கண்டேன். காலையானவுடன் கௌலி பின் யzஸீத் அந்த ஒளி பொருந்திய சிரசை கொடியோனாகிய இப்னு zஸியாதிடம் எடுத்துச் சென்றான். (அல்காமில் ஃபித்தாரீக், பாகம் 3, பக்கம் 434)

## கௌலி பின் யzஸீதின் திகிலூட்டும் முடிவு

துன்யாவின் முஹBப்பத்தும், செல்வத்தின் மீதுள்ள பேராசையும் ஒருவனை குருடாக்கி தீய வழியில் கொண்டு செல்கிறது. கௌலி பின் யzஸீத் துன்யாவின் முஹBப்பத்திற்காகவே கர்பலாவில் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை பரிசுத்த உடலிலிருந்து துண்டித்தான். ஆனால் சில ஆண்டுகளின் பின் இவ்வுலகிலேயே பயங்கரமான முடிவை அடைந்து மரணித்தான். ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْهُ அவர்களை கொலை செய்தவர்களை சில ஆண்டுகளின் பின் முக்தார் ஸகஃபி பழிதீர்த்த விதத்தை, ஹழ்ரத் அல்லாமா மௌலானா ஸய்யித் முஹம்மத் நஈமுத்தீன்

முராதாBபாதி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: அதாவது யார் யாரெல்லாம் அம்ர் பின் ஸஹ்த் (யzஸீதி படையின் தலைவன்) உடன் கர்பலாவில் கூட்டு சேர்ந்தார்களோ அவர்கள் அத்தனைப் பேரும் கண்ட இடத்தில் கொல்லப்பட வேண்டுமென முக்தார் உத்தர விட்டார். இந்த உத்தரவைக் கேட்டவுடன், கூ∴பாவின் அந்த அஞ்சா நெஞ்சம் படைத்த கொடியவர்கள் Bபஸராவை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். முக்தாரின் படையினர் அவர்களை விரட்டிச் சென்று கண்ட இடங்களிலெல்லாம் கொன்றொழித்தார்கள். பிணங்களெல்லாம் சுட்டெரிக்கப்பட்டு, வீடுகள் சூரையாடப்பட்டன. கொடியோனாகிய “கௌலி பின் யzஸீத்” அதாவது ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை அவர்களின் பரிசுத்த மேனியிலிருந்து வேறுபடுத்திய, அந்த ஈவிரக்கமற்றப் பாவியும் கைது செய்யப்பட்டு முக்தாரிடம் ஒப்படைக்கப்பட்டான். ஆரம்பமாக முக்தார் அவனின் கைகளையும், கால்களையும் வெட்ட வைத்து பின்பு தூக்கில் தொங்கவிட்டு இறுதியில் தீயில் போட்டான். இதே போல் இப்னு ஸஅதின் படையினர்கள் அனைவரும் விதவிதமாக துன்புறத்தப்பட்டு, கொல்லப்பட்டனர். இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் உயிர் தியாகமாக்கப்படுவதில் பங்கேற்ற கூ∴பாவின் ஆறாயிரம் தீயவர்கள் விதவிதமான தண்டனைகள் வழங்கப்பட்டு முக்தாரினால் கொல்லப்பட்டனர். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 122)

## ஈட்டியின் நுனியில் பரிசுத்தக் குர்ஆனின் ஓதல்

ஹழ்ரத் zஸைத் பின் அர்கம் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்கள் அறிவிக்கின்றார்கள், யzஸீதிகள் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை ஓர் ஈட்டியில் சொருகி உயர்த்திப் பிடித்தவர்களாக கூ..:.பாவின் வீதிகளிலே ஊர்வலம் சென்றபோது நான் என் வீட்டின் மாடியிலே இருந்தேன். அந்த முபாரக்கான சிரசு என்னைத் தாண்டிச் செல்லும் போது, (15ஆம் ஜுஸ்உ, சூரதுல் கஹ்.:.பின் 9வது) திருவசனத்தை அந்த சிரசு ஓதக் கேட்டேன்:

اَمْ حَسِبْتَ اَنَّ اَصْحٰبَ الْكَهْفِ وَ الرَّقِیْمِ كَانُوْا مِنْ اٰیٰتِنَا عَجَبًا ۝۹

தர்ஜுமா கன்zஸுல் ஈமான்: குகைவாசிகளும் காட்டின் புறத்தில் இருந்தவர்களும் எங்களுடைய அத்தாட்சியில் நின்றும் உள்ளவர்கள் என்பதை அறிந்துக் கொண்டீர்களா. (ஷவாஹிதுன் நுபுவ்வஹ், பக்கம் 231)

இதேபோல், இன்னுமொரு பெரியார் رَحْمَۃُ اللّٰہِ تَعَالٰی عَلَیْہ அவர்கள் அறிவிக்கின்றார்கள், யzஸீதிகள் ஒளி பொருந்திய சிரசிலிருந்து ஈட்டியை அகற்றி, கொடியவன் இப்னு zஸியாதின் மாளிகையினுள் அதனை எடுத்துச் சென்றபோது, ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்களின் உதடுகள் அசைந்தன. மேலும் அவர்களின் முபாரக்கான நாவினில் 13ஆம் ஜுஸ்உ, சூரா இப்றாஹீமின் 42வது திருவசனம் ஓதப்பட்டுக்கொண்டிருந்தது.

وَلَا تَحْسَبَنَّ اللّٰهَ غَافِلًا عَمَّا يَعْمَلُ الظّٰلِمُوْنَ

தர்ஜீமா கன்zஸீல் ஈமான்:அல்லாஹ் அநியாயக்காரர்களின் செயல்களை அறியாதிருக்கிறான் என்று எண்ணி விடாதீர்கள். (ரௌழதுஷ் ஷுஹதா, பாகம் 2, பக்கம் 385)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

மின்ஹால் இப்னு அம்ர் கூறுகிறார்கள்: அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது ஆணையாக நான் பார்த்தேன். ஹழ்ரத் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை மக்கள் ஈட்டியில் சொருகி, வீதி வழியாக ஊர்வலம் எடுத்துச் சென்றபோது நான் "டமஸ் கஸ்ஸில்" இருந்தேன். அப்போது ஒருவர் அந்த முபாரக்கான சிரசுக்கு முன்னால் சூரதுல் கஹ்ஃபை ஓதிக் கொண்டிருந்தார். அவர் 15வது ஆயத், அதாவது:

اَنَّ اَصْحٰبَ الْكَهْفِ وَالرَّقِيْمِ كَانُوْا مِنْ اٰيٰتِنَا عَجَبًا ﴿۹﴾

தர்ஜீமா கன்zஸீல் ஈமான்: குகை வாசிகளும் காட்டின் புறத்தில் உள்ளவர்களும் எங்களுடைய அத்தாட்சியில் நின்றும் உள்ளவர்கள்.

என்ற திருவசனத்தை அடைந்தவுடன், அல்லாஹ் عَزَّوَجَلَّ அந்த முபாரக்கான சிரசுக்கு பேசும் ஆற்றலைக்

கொடுக்கவே அந்த சிரசு, اَعْجَبُ مِنْ اَصْحَابِ الْكَهْفِ قَتْلِىْ وَحَمْلِىْ "என்னுடைய கொலையும் என் சிரசை சுமந்து சுற்றித் திரிவதும் அஸ்ஹாBபுல் கஹ்ஃப் சம்பவத்தைவிட அற்புத மானது" என தெளிவாக பேசியது. (ஷர்ஹுஸ் ஸுதூர், பக்கம் 212)

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! ஹழ்ரத் அல்லாமா மௌலானா ஸய்யித் முஹம்மத் நஈமுத்தீன் முராதாBபாதி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ஸவானிஹே கர்பலா எனும் நூலில் மேற்கூறப்பட்ட சம்பவத்தை கூறிய பின் அதற்கு விளக்கம் தருகிறார்கள்: அதாவது இந்த விடயம் சத்தியமானதாகும். ஏனெனில் அஸ்ஹாBபுல் கஹ்ஃப் (குகை வாசிகள்) மீது காஃபிர்கள் அநியாயம் இழைத்தார்கள். அதேபோல் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் விடயத்தில், அவர்களுடைய பாட்டனார் பரிசுத்த மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் உம்மத்தினர்கள் அவர்களை விருந்தாளியாக அழைத்து ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்காமல் வஞ்சித்தார்கள். மேலும் இமாம் ஹுஸைன் رَضِىَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களுடைய குடும்பத்தவர் களையும், தோழர்களையும் رَضِىَ اللّٰهُ تَعَالٰى عَنْهُم அவர்களுக்கு முன்னாலே ஷஹீதாக்கி, இறுதியில் அவர்களையும் ஷஹீதாக்கி விட்டார்கள். மரியாதைக்குரிய அஹ்லுல் பைத்துக்கள் رَضِىَ اللّٰهُ تَعَالٰى عَنْهُم சிறை பிடிக்கப்பட்டு, இமாம் அவர்களின் சங்கையான சிரசு பல்வேறு இடங்களில் சுமந்து செல்லப்பட்டன. அஸ்ஹாBபுல் கஹ்ஃப் பலவருடக்

காலம் ஆழ்ந்த நித்திரையின் பிறகு பேசினார்கள் என்பது உண்மையிலேயே அதிசயமான விடயமாகும். ஆனால், ஒளி பொருந்திய சிரசு பரிசுத்த உடலிருந்து வெட்டி நீக்கப்பட்ட பின்னரும் பேசியதென்பது அதைவிட அதிசயமான விடயமாகும். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 118)

## இரத்தத்தால் எழுதப்பட்ட கவிதை வரிகள்

யZஸீதின் படை கர்பலாவுடைய உயிர்த் தியாகிகளின் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُم பரிசுத்தமான தலைகளைச் சுமந்தவர்களாக ஊர்வலம் சென்று கொண்டிருந்த போது ஓர் இடத்தில் தங்கினார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா ஷாஹ் அப்துல் அZஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர்கள் பேரீத்தம் பழச்சாற்றை குடிக்கத் தொடங்கினார்கள். இன்னுமொரு ரிவாயத்தில், وَهُمْ يَشْرَبُوْنَ الْخَمْرَ அதாவது அவர்கள் மதுவை அருந்தத் தொடங்கினார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நேரத்தில் ஓர் இரும்புப் பேனா தோன்றி பின்வரும் கவியடிகளை இரத்தத்தால் எழுதியது:

اَتَرْجُوْ اُمَّةٌ قَتَلَتْ حُسَيْنًا     شَفَاعَةَ جَدِّهٖ يَوْمَ الْحِسَابِ

(அதாவது இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களைக் கொன்றவர்கள், அவர்களின் கண்ணியமான பாட்டனார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களது ஷ.்.பாஅத் கியாம நாளில் கிடைக்கும் என்று நம்பிக்கைக் கொண்டுள்ளார்களா?

சில ரிவாயத்துக்களில், மேற்கூறப்பட்ட கவிதை வரிகள் கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالَى عَلَيْهِ وَآلِهِ وَسَلَّم அன்னவர்களின் வருகைக்கு 300 வருடங்களுக்கு முன்னரே ஒரு கல்லில் எழுதப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அஸ் ஸவாஇகுல் முஹர்ரகா 194)

## ஒளி பொருந்திய சிரசின் அற்புதத்தால் பாதிரி இஸ்லாத்தைத் தழுவினார்

ஒரு கிறிஸ்தவப் பாதிரி தேவாலயத்திலிருந்து (Church) ஒளி பிரகாசிக்கும் சிரசினைப் பார்த்து, அதைப்பற்றி விசாரித்தார். அனைத்து விடயங்களும் அவருக்கு சொல்லப்பட்டவுடன், நீங்கள் தீயவர்கள், "பத்தாயிரம் அஷ்ர.:.பிகள் (தங்க நாணயங்கள்) பெற்று, ஒரு நாளிரவு இந்த சிரசை என்னிடம் விட்டுச் செல்வதை நீங்கள் பொருந்திக் கொள்வீர்களா?" என்று கேட்டார். அந்தப் பேராசைக்காரரர்கள் அதை பொருந்திக் கொண்டனர். அந்தப் பாதிரி ஒளி பொருந்திய அந்த சிரசைக் கழுவி, வாசனையிட்டு, தன் தொடையில் வைத்து இரவு முழுவதும் பார்த்துக் கொண்டே இருந்தார். ஓர் ஒளிக்கதிர் முபாரக்கான சிரசிலிருந்துப் பிரகாசிப்பதை அவர் அவதானித்தார். பாதிரி முழு இரவையும் அழுகையோடு கழித்து விட்டு, மறுநாள் காலையில் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார். தேவாலயத்தையும், அவரது உடைமைகளையும்

கைவிட்டு விட்டு, மீதியுள்ள வாழ்நாளை அஹ்லுல் பைத்துக்களுக்கு பணிவிடை செய்வதில் கழித்து வந்தார். (அஸ் ஸவாஇகுல் முஹர்ரகா 199)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## திர்ஹம்களும் தீனார்களும் சிறு கற்களாயின

இமாம் ஹுஸைன் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்களது கூடாரங்களிலிருந்து கொள்ளையிட்ட திர்ஹம்களும், தீனார்களும் மேலும் பாதிரியிடமிருந்து எடுத்தவைகளையும் பங்கிடுவதற்காக யஸீதிகள் அந்தப் பைகளைத் திறந்த போது, அவைகள் யாவும் சிறு கற்களாக மாறி இருப்பதைக் கண்டார்கள். அவற்றின் ஒரு பக்கத்தில் 13ம் ஜுஸ்உ, சூரதுல் இப்றாஹீமின் (42வது) திருவசனம்,

وَلَا تَحْسَبَنَّ اللّٰهَ غَافِلًا عَمَّا يَعْمَلُ الظّٰلِمُوْنَ ۬ؕ

(தர்ஜமா கன்zஸுல் ஈமான்: இன்னும் அடக்குமுறையாளர்களின் செயல்களைப் பற்றி அல்லாஹ் அறியாமல் இருக்கிறான் என்று எண்ணி விடாதீர்கள்.)

இன்னும் மறுபக்கத்தில் 19ம் ஜுஸ்உ, சூரதுல் ஷுஅராவின் (227வது) திருவசனம் எழுதப்பட்டிருந்தது:

وَسَيَعْلَمُ الَّذِيْنَ ظَلَمُوْٓا اَيَّ مُنْقَلَبٍ يَّنْقَلِبُوْنَ ﴿٢٢٧﴾

(தர்ஜமா கன்zஸுல் ஈமான்: இன்னும் அடக்கு முறையாளர்கள் எந்தப் பக்கம் திருப்பிப் போடப்படுவார்கள் என்பதை வெகு சீக்கிரம் தெரிந்துக் கொள்வார்கள்.) (அஸ் ஸவாஇகுல் முஹர்ரகா 199)

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இது ஒரு படிப்பினைக்குரிய விடயமாகும். அதாவது, கேடு கெட்டவர்களே! நீங்கள் நிலையற்ற இவ்வுலகிற்காக இஸ்லாத்தை விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பரிசுத்த குடும்பத்தினர்களை கொடுமைப்படுத்தினீர்கள். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் சன்மார்க்கத்தைப் பற்றி அலட்சியமாக இருந்தீர்கள். நீங்கள் செய்த இப்படியான செயலின் காரணத்தால் உலகாயித நன்மைகளை இழந்து விட்டதோடு, நீங்கள் خَسِرَ الدُّنْيَا وَالْاٰخِرَةَ அதாவது இவ்வுலகிலும், மறுமையிலும் நஷ்டவாளி என்ற அடையாளச் சின்ன மாக ஆகி விட்டீர்கள்.

சன்மார்க்கத்தை விட அழிந்து போகும் இவ்வுலகை தெரிவு செய்த முஸ்லிம்களுக்கு நம்பிக்கையற்ற இவ்வுலகம் ஏமாற்றத்தையே கொடுத்தது. மேலும் அழிந்து போகும் இவ்வுலகை பொருட்படுத்தாமல் குர்ஆன், சுன்னத்துக்களின்

சட்டங்களில் உறுதியாக நின்றவர்களுக்குப் பின்னால், இவ்வுலகம் சென்றது என்பதை வரலாறு தெட்டத் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. அவர்கள் இவ்வுலக வாழ்வில் மாத்திரமல்ல மறு உலக வாழ்விலும் பேரின்பம் அடைவார்கள். எனது எஜமான் அ.:.லா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் எழுதியுள்ளார்கள்:

**வோ கே இஸ் தர் கா ஹுவா ஹல்கே ஹுதா உஸ்கி ஹுவி**
**வோ கே இஸ் தர் ஸே பிரா அல்லாஹ் உஸ்ஸே பிர் Gகயா**

யார் மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுக்கு நன்றி விசுவாசத்தோடு உள்ளாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் படைப்பினம் அவருக்கு நன்றி விசுவாசமுடையதாக ஆகிவிடும். யார் மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுக்கு நன்றி விசுவாசமற்றவராக ஆகிவிடுகிறாரோ அல்லாஹ் عَزَّوَجَلَّ அவரை கைவிட்டு விடுகிறான்.

## ஒளி பொருந்திய சிரசு எங்கே நல்லடக்கம் செய்யப்பட்டது

இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசு நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புக்கள் உள்ளன.அல்லாமா குர்துBபி அவர்களும் ஸய்யிதுனா ஷாஹ் அப்துல் அZஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْهِمَا அவர்களும் கூறுகிறார்கள்.

கர்பலா சிறைக் கைதிகளோடு ஒளி பொருந்திய சிரசை மதீனா முனவ்வராவுக்கு زَادَهَا اللّٰهُ شَرَفًا وَّ تَعْظِيْمًا யzஸீத் அனுப்பி வைத்தான். மதீனா முனவ்வராவில் زَادَهَا اللّٰهُ شَرَفًا وَّ تَعْظِيْمًا அந்த ஒளி பொருந்திய சிரசு க.:.பனிடப்பட்டு, ஜன்னதுல் பகீயிலே ஸய்யிததுனா .:.பாத்திமா zஸஹ்ரா அல்லது ஸய்யிதுனா இமாம் ஹஸன் முஜ்தBபா رَضِىَ اللّٰهُ تَعَالٰى عَنْهُمَا அவர்களுக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் சிலர் கூறுகிறார்கள், கர்பலாவின் சிறைக் கைதிகள் 40 நாட்களுக்குப் பிறகு கர்பலாவிற்கு மீண்டும் வருகை தந்து, முபாரக்கான உடலோடு ஒளி பொருந்திய சிரசைப் பொருத்தி நல்லடக்கம் செய்தார்கள்.

மேலும் சிலர் கூறுகிறார்கள், இமாம் ஹுஸைன் رَضِىَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை நகரங்கள் தோறும் ஊர்வலமாக எடுத்துச் செல்லுமாறு யzஸீத் தன் தோழர்களுக்கு கட்டளையிட்டான். அவர்கள் அஸ்கலான் என்ற இடத்தை அடைந்தவுடன், அந்த ஊரின் ஆட்சியாளர் அந்த ஒளி பொருந்திய சிரசை எடுத்து நல்லடக்கம் செய்தார். ஐரோப்பியர்கள் அஸ்கலானை முற்றுகையிட்டவுடன், ஸாலிஹ் என்று கூறப்படும் தலாஇ.:. பின் ரzஸ்ஸீக் 30 ஆயிரம் தீனார்களை ஐரோப்பியர்களுக்குச் செலுத்தி அந்த ஒளி பொருந்திய சிரசை வாங்கி, ஹிஜ்ரி 548 ஞாயிற்றுக்கிழமை, ஜமாதுல் ஆகிர் 8ம் நாளன்று தன் படைகளோடும் சேவகர்களோடும்

வெறும் காலோடு நடந்து, ஒளி பொருந்திய சிரசை எகிப்துக்குக் கொண்டு வந்தார். அப்போதும் கூட ஒளி பொருந்திய சிரசின் இரத்தம் புதியதாக இருந்ததோடு அதில் கஸ்தூரி மணமும் வீசிக் கொண்டிருந்தது. அந்த ஒளி பொருந்திய சிரசை அவர் ஒரு பச்சை நிற (பட்டுப்) பையில் போட்டு, கருங்காலி மரத்தாலான ஓர் இருக்கையிலே வைத்து கஸ்தூரி, அம்பர் இன்னும் வாசனைத் திரவியங்களை அதைச் சுற்றி வைத்து, இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களுக்காக மஷ்ஹதே ஹுஸைனி (அதாவது ஒரு சன்னிதானத்தை) செய்ய வைத்தார்கள். கரீBப்கான் கலீலியினால் செய்யப்பட்ட மஷ்ஹதே ஹுஸைனி சன்னிதானம் பிரபல்யம் வாய்ந்ததாகும். (ஷாமே கர்பலா, பக்கம் 246)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## ஒளி பொருந்திய சிரசை ஸியாரத் செய்தல்

ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேக் அப்துல் ஃபத்தாஹ் பின் அBபீபக்ர் பின் அஹ்மத் ஷாஃபிஈ கல்வதீ رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் நூருல் ஐன் எனும் தன் சிறுநூலில் அறிவிக்கி றார்கள்: ஷேகுல் இஸ்லாம் ஷம்ஸுத்தீன் லிகானீ رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ஒளி பொருந்திய சிரசினை தரிசிப்பதற்காக மஷ்ஹதே ஹுஸைனி சன்னிதானத்திற்கு அடிக்கடி

சென்று, இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசு இந்த இடத்தில்தான் இருக்கிறது என்று கூறுவார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேக் ஷிஹாBபுத்தீன் ஹன.்.பி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: நான் மஷ்ஹதே ஹுஸைனியை zஸியாரத் செய்தேன். ஆனால் ஒளி பொருந்திய சிரசு உண்மையில் இங்கே இருக்கிறதா இல்லையா? என்ற சந்தேகம் ஏற்பட்டதும் திடீரென நித்திரை என்னை ஆட்கொண்டது. நான் ஒரு கனவு கண்டேன், ஒருவர் அந்த ஒளி பொருந்திய சிரசின் அருகிலிருந்து வெளியேறி மதீனத்து மாமன்னர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் முபாரக்கான அறையினுள் (அடக்கஸ் தலம்) சென்று, யா ரசூலல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களே! அஹ்மத் பின் ஹல்Bபி அவர்களும், அப்துல் வஹ்ஹாப் அவர்களும் (رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْهِمَا) உங்களுடைய திருப்பேரர் இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசின் அடக்கஸ்தலத்தைப் பார்வையிட்டனர்கள், என்று பணிவோடு கூறினார்கள். கண்ணிய மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள், اَللّٰهُمَّ تَقَبَّلْ مِنْهُمَا وَاغْفِرْ لَهُمَا யா அல்லாஹ் عَزَّوَجَلَّ அவர்கள் இருவரின் தரிசனத்தை ஏற்று அவர்கள் இருவரையும் பிழை பொறுத்தருள்வாயாக! என்று கூறினார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேக் ஷிஹாBபுத்தீன் ஹன.்.பி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ

அவர்களின் ஒளி பொருந்திய சிரசு இந்த இடத்தில்தான் நல்லடக்கம் பெற்றுள்ளது என அன்றிலிருந்து உறுதியாகிவிட்டது. பின்பு நான் மரணிக்கும் வரை அவர்களின் ஒளி பொருந்திய சிரசை ஸியாரத் செய்வதை கைவிடவே இல்லை. (ஷாமே கர்பலா, பக்கம் 247)

## ஒளி பொருந்திய சிரசிடமிருந்து ஸலாமுக்கு பதில்

ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேக் கலீல் அBபில் ஹஸன் தமார்ஸி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ஒளி பொருந்திய சிரசை தரிசிப்பதற்காக முபாரக்கான சன்னிதானத்திற்கு சமூகமளித்து, اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا اِبْنَ رَسُوْلِ اللهِ (ரசூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மகனாரே! உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும்) என்று கூறுவார்கள். அக் கணமே, وَعَلَيْكَ السَّلَامُ يَا اَبَا الْحَسَنِ (ஹஸனின் தந்தையாரே! உங்கள் மீதிலும் ஸலாம் உண்டாகட்டும்) என்ற பதிலை செவிமடுப்பார்கள். ஒரு நாள் ஸலாமுக்கு பதில் கிடைக்கவில்லை. ஆச்சரியம் அடைந்தவர்களாக ஸியாரத் செய்து விட்டு திரும்பி வந்து விட்டார்கள். மறுநாள் திரும்பவும் சமூகமளித்து ஸலாம் கூறிய போது, பதில் கிடைத்தது. அப்போது அவர்கள் பணிவுடன் யா ஸய்யிதி! நேற்று நான் தங்களின் பதிலினால் அருட்பெற வில்லையே என்ன காரணம்? என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், அபுல்

ஹஸனே! நேற்று இந்நேரம், நான் என் நேசத்துக்குரிய பாட்டனார், அகிலத்தின் அருள் ஜோதி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் திருசமூகத்திற்கு சென்று, உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள். (ஷாமே கர்பலா, பக்கம் 247)

ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஹ்ரானீ رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், இஸ்லாத்தின் அஹ்லுல் கஷ்.:.புடைய சூ.:.பியாக்கள், ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசு இந்த இடத்தில்தான் உள்ளது என்று கூறியுள்ளார்கள். ஷேக் கரீமுத்தீன் கல்வதீ رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், நான் இந்த இடத்தை பரிசுத்த மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அனுமதியுடனேயே ஸியாரத் செய்தேன் என்று கூறியுள்ளார்கள். (ஷாமே கர்பலா, பக்கம் 248)

## ஒளி பொருந்திய சிரசின் அதிசயமிக்க பரகத்

அறிவிக்கப்பட்டுள்ளது: எகிப்தின் மன்னர் “அரசர் நாஸிருக்கு” குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றிய தகவல், அதாவது அந்த நபர் அரண்மனையில் புதையல்கள் எங்கே புதைக்கப்பட்டிருக்கும் என்றும் அவை உள்ள இடத்தை அவர் யாரிடமும் சொல்லமாட்டார் என்றும் கூறப்பட்டது. அப்போது அரசர் அந்தப் புதையல்கள் எங்கே உள்ளன என்பதை வெளிப்படுத்துவற்காக, அவரை சித்திரவதை செய்யுமாறு உத்தரவிட்டார். சித்திரவதை

செய்வதற்காக நியமிக்கப்பட்டவர் அவரைப் பிடித்து, மல வண்டுகளையும், செங்கண் ஈக்களையும் அவரது தலையில் போட்டு ஒரு துணியால் சுற்றிக் கட்டினார். பயங்கரமான இந்த வேதனை மனிதனால் ஒரு நிமிடம் கூடத்தாங்க முடியாததாகும். அவனுடைய மூளை சிதர ஆரம்பித்துவிடும் அதனால் அவன் இரகசியத்தை உடனே வெளியாக்கி விடுவான். அப்படி இல்லையென்றால் சில நிமிடங்களில் துடிதுடித்து இறந்து விடுவான். இந்தத் தண்டனை பல முறை அந்த மனிதருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக ஒவ்வொரு முறையும் மல வண்டுகள்தான் செத்தொழிந்தன. மக்கள் இதற்கான காரணத்தை கேட்டபோது, இமாம் ஹுஸைன் رضی اللہ تعالیٰ عنہ அவர்களின் ஒளி பொருந்திய சிரசு எகிப்துக்குக் கொண்டு வரப்பட்டபோது, اَلْحَمْدُ لِلّٰہِ عَزَّوَجَلَّ அதன் மீது நேசம் கொண்டவனாக அதை என் தலையில் வைத்தேன். அதன் பரகத்தும், கராமத்தும்தான் இது என்று கூறினார்கள். (ஷாமே கர்பலா, பக்கம் 248)

صَلُّوْا عَلَی الْحَبِیْب　　صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلٰی مُحَمَّد

## கொட்டும் அந்தப் பூச்சிகள் தொடர்பான விபரங்கள்

பரகத்தான ஒரு பொருளை நல்லெண்ணத்துடன் தலையில் வைத்துக்கொள்வது ஈருலகிலும் நற்கூலியைத் தரக்கூடிய செயலாகும் என்பதை அறிந்துக் கொண்டோம்.

இச்சம்பவத்தில் இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட பூச்சிகள் தொடர்பான சில விபரங்கள் இங்கே தரப்படுகின்றன. மலவண்டுகள் என்பது மலங்களிலும், நஜீஸ்களிலிருந்தும் உருவாகக்கூடிய இரண்டு கொம்புகளுள்ள கருப்பு நிற புழுக்களாகும். செங்கண் ஈக்கள் என்பது பட்டை போன்ற செந்நிறமான சிறுவிதை அளவிலான புழுக்களாகும். அவை பொதுவாக மழைக் காலத்தில் சில காடுகளில் உருவாகும். இவை காயவைக்கப்பட்டு பட்டினை நிறமூட்டுவதற்காக அவற்றின் கடுமையான சிகப்பு நிறம் பயன்படுத்தப்படுகிறது. மருந்துகள் செய்வதற்கும் இது பயன்படுத்தப்படுவதோடு தைலமும் இதில் பெறப்படுகிறது. பழங்காலத்தில், குற்றவாளிகளிடம் அவர்களின் குற்றங்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு இப்படியான தண்டனைகள் வழங்கப்பட்டன. மலவண்டுகள் அவர்களின் தலை மண்டையோட்டில் வைக்கப்பட்டு செங்கண் ஈக்கள் அவற்றின் மேல் வைக்கப்பட்டு ஒரு சாதாரண துணியினால் கட்டப்படும். வண்டுகள் தொடர்ந்து கடித்து கடித்து மண்டையோட்டில் துவாரங்களை உண்டாக்கி விடும். செங்கண் ஈ மலக்கழிவுகளோடு கடித்துக் கொண்டு அத்துவாரங்கள் வழியாக உள்நுழைவதால் மூளையின் இரத்தக் குழாய்கள் வெடிக்கும். அது தாங்க முடியாத தண்டனை என்பதால் குற்றவாளி உடனே குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுவான். இந்த அச்ச மூட்டும் இவ்வுலக வேதனை மறுமையின் வேதனையை

ஞாபகப்படுத்துகிறது. ஆஹ்! இந்த புழுக்களின் வேதனையை நம்மில் எவரும் ஒரு கணமேனும் தாங்கிக் கொள்ள முடியாதே, அப்படியானால் கப்ரிலும், மறுமை யிலும் பாம்புகளின் கடிகளையும், தேள்களின் கொட்டு தலையும் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்! இறைவன் பாதுகாக்க வேண்டும், ஒரு சிறு பாவத்தின் காரணத்தால் ஒரேயொரு தேள் நமது தலைக்கு மேல் வைக்கப்பட்டு விட்டால் நமது நிலைமை என்னவாகும்!

## முபாரக்கான சிரசின் ஒளிப் பிரகாசம்

இன்னுமொரு ரிவாயத்தில் வந்துள்ளது: ஒளி பொருந்திய சிரசு மோசக்காரனான யZஸீதின் கZஸானாவில் வைக்கப்பட்டிருந்தது. Bபனூ உமைய்யாவுடைய அரசன் சுலைமான் பின் அப்துல் மலிக் உடைய ஆட்சி (ஹிஜ்ரி 96 முதல் 99 வரை) வந்தபோது, அவர் அதைப் பற்றித் தெரிந்து கொண்டு ஒளி பொருந்திய சிரசை ஸியாரத் செய்யும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார். அந்நேரத்தில் ஒளி பொருந்திய சிரசின் முபாரக்கான எலும்புகள் வெள்ளியைப் போல் பளபளத்துக் கொண்டிருந்தன. அவர் அதற்கு வாசனைத் திரவியம் பூசி, க.:.பன் செய்து முஸ்லிம்களின் அடக்கஸ்தளத்தில் நல்லடக்கம் செய்ய வைத்தார். (தஹ்தீBபுத் தஹ்தீBப், பாகம் 2, பக்கம் 326, தாருல் .:.பிக்ர் பேரூத்)

صَلُّوْا عَلَى الْحَبِيْب    صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## மாநபியினுடைய மகிழ்வின் இரகசியம்

ஹழ்ரத் அல்லாமா இப்னு ஹஜர் ஹைதமி மக்கி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவித்துள்ளார்கள். சுலைமான் பின் அப்துல் மலிக் அவர்கள் கனவில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களை தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்கள். கனவிலே ஈருலக அருளாளர் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அவரோடு மிக்க இரக்கமாக நடந்துக் கொண்டார்கள். மறுநாள் காலை அவர்கள் ஸய்யிதுனா ஹஸன் Bபஸரி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களிடம் அந்தக் கனவுக்கான விளக்கத்தைக் கேட்டார்கள். ஸய்யிதுனா ஹஸன் Bபஸரி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், ஒரு வேளை நீங்கள் நபி பெருமானார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் குடும்பத்திற்கு ஏதாவது நன்மையைச் செய்திருப்பீர்கள் என்று கூறினார்கள். ஆம் நான் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை யzஸீதின் கzஸானாவில் கண்டேன். நான் அதனை ஐந்து துணித் துண்டுகளினால் சுற்றி, எனது தோழர்களோடு ஜனாஸாத் தொழுது நல்லடக்கம் செய்தேன். ஹழ்ரத் ஸய்யிதுனா ஹஸன் Bபஸரீ رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், இந்த நற்செயல்தான் பரிசுத்த மாநபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மகிழ்வுக்கு காரணம் என்று கூறினார்கள். (அஸ் ஸவாஇகுல் முஹர்ரகா, பக்கம் 199)

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## பல்வேறு மஷாஹதுகளுக்கு விளக்கம்

புகழ்பெற்றப் பாகிஸ்தானியப் பேச்சாளர், ஹழ்ரத் மௌலானா அல் ஹாஜ் அல் ஹாபிழ் முஹம்மத் ஷபீ.'. ஒகாடவீ رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ஷாமே கர்பலா எனும் தனது நூலில் குறிப்பிடுகிறார்கள்: ஒளி பொருந்திய சிரசு தொடர்பாக பல அறிவிப்புக்கள் உள்ளன. மேலும் பல இடங்களில் மஷாஹத்கள் அமைக்கப்பட்டுள்ளன. (மஷாஹத் என்பது மஷ்ஹத் என்பதன் பன்மையாகும். மஷ்ஹத் என்றால் சமூகமளிக்கும் இடம் என்றும் பொருளுள்ளது) இந்த அறிவிப்புக்கள் மற்றும் மஷ்ஹத்களின் தொடர்பு சில சிரசுகளைக் கொண்டதாகவும் இருக்கலாம். ஏனெனில் ஷுஹதாக்களான அஹ்லுல் பைத்துக்களின் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُم அனைத்து சிரசுகளும் யzஸீதுக்கே அனுப்பப்பட்டன. எனவே அவைகள் வெவ்வேறு இடங்களில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் மரியாதையின் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களைப் பற்றி மாத்திரமே குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். وَاللّٰهُ اَعْلَمُ بِحَقِيْقَةِ الْحَالِ (ஷாமே கர்பலா, பக்கம் 249)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## மன்னிப்பை விட்டும் நம்பிக்கையிழந்த திகிலூட்டும் சம்பவம்

ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ முஹம்மத் சுலைமான் அல் அ∴மஷ் கூ∴பி தாபிஈ رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஜ் கடமைக்காக சென்ற போது ஒரு மனிதரைக் கண்டேன். அவர் தவா∴பின் போது பரிசுத்தக் க∴பாவின் புனிதமான திரைச்சீலையைப் பற்றிப் பிடித்தவராக, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ என்னை மன்னித்து விடு, ஆனால் நீ என்னை மன்னிக்கமாட்டாய் என்ற சந்தேகம் எனக்கு உள்ளது, என புலம்பிக் கொண்டிருந்தார். அவரது அந்த துஆவை கேட்டு, மன்னிப்பின் மீது கூட நம்பிக்கை இழந்து விடும் அளவுக்கு அப்படி என்னதான் பாவத்தை இவர் செய்தாரோ என்று எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ஆனால் நான் தவா∴ப் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். இரண்டாவது சுற்றின் போதும், அவர் அதேபோல் புலம்பிக் கொண்டிருப்பதைக் கேட்டு, நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். தவா∴பை முடித்த பிறகு, நான் அவரிடம், பெரும் பெரும் பாவங்களையும் பொறுத்தருளக்கூடிய புண்ணிய தளத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள். அவனது மன்னிப்பையும், கருணையையும் தேடுபவராக நீங்கள் இருந்தால் நம்பிக்கையோடு இருங்கள். அவன் கருணையும், தாராளமும் மிக்கவனாகும் என்று கூறினேன். அந்த மனிதர், அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் நல்லடியாரே

நீங்கள் யார்? என்றுக் கேட்டார், நான் சுலைமான் அல் அ∴மஷ் (رَحْمَةُ اللهِ تَعَالَى عَلَيْه) என்றுக் கூறினேன்! அவர் என் கையைப் பிடித்து ஒரு பக்கத்திற்கு அழைத்துச் சென்று, எனது பாவம் மிகப்பெரியது என்று கூறினார். அப்போது நான், உனது பாவம் மலைகள், வானங்கள், பூமிகள், அர்ஷை விடப்பெரியதோ? என்று கேட்டேன். அவர் பதிலளித்தார், ஆம், எனது பாவம் மிகப் பெரியது. சுலைமானே! நான் இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசை யஸீதிடம் எடுத்து வந்த 70 துரதிஷ்டசாலிகளில் ஒருவன். அந்த ஒளி பொருந்திய சிரசை நகருக்கு வெளியே தொங்க விடும்படி யஸீத் கட்டளையிட்டான். பின்பு, அவனது கட்டளைப் பிரகாரமே அதை இறக்கி ஒரு தங்கத் தட்டில் வைத்து யஸீதின் படுக்கை அறையில் வைக்கப்பட்டது. நல்லிரவில் யஸீதின் மனைவி எழுந்த போது, ஒளி பொருந்திய சிரசிலிருந்து வானம் வரை ஓர் ஒளி பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். யஸீதின் மனைவி திகிலடைந்து, யஸீதை எழுப்பி, எழுந்துப் பார், நான் ஓர் அதிசயத்தைக் காண்கிறேன் என்றுக் கூறினாள். யஸீதும் அந்த ஒளியைப் பார்த்து விட்டு, மௌனமாக இருக்கும்படி தன் மனைவிக்குக் கூறினான். காலையில் அந்த ஒளி பொருந்திய சிரசை ஒரு மரகதக் கூடாரத்தில் வைக்கச் செய்து, அதை கண்காணிப்பதற்கு 70 பேர்களை அவன் நியமித்தான். அதில் நானும் ஒருவன். பின்பு உணவு

உண்ணுவதற்குப் போகும்படி நமக்கு கட்டளையிடப்பட்டது. சூரியன் மறைந்து நன்றாக இருண்டப் பிறகு நாங்கள் நித்திரைக்குச் சென்றோம். திடீரென எனக்கு விழிப்பு ஏற்பட்டது. வானத்தில் பெரிய மேகம் ஒன்று சூழ்ந்திருப்பதைக் கண்டேன். அதிலிருந்து இடி ஓசையையும் பறவைகள் சிறகடிக்கும் ஓசையையும் கேட்டேன். பின்பு அந்த மேகம் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி நிலத்தைத் தொட்டு விட்டது. அதிலிருந்து ஒரு மனிதர் வெளிப்பட்டார். அவரிடம் இரண்டு சுவர்க்க ஆடைகள் இருந்தன. மேலும் அவரது கையில் தரைவிரிப்பு ஒன்றும், கதிரைகளும் இருந்தன. அவர் தரைவிரிப்பை விரித்து கதிரைகளை அதன் மேல் வைத்து, மனிதக் குலத்தின் தந்தை ஆதம் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்களே! தயவுசெய்து வாருங்கள் என அழைக்கத் தொடங்கினார்: மிகவும் அழகான மகான் ஒருவர் தோன்றி, ஒளி பொருந்திய சிரசின் அருகில் நின்று, “அல்லாஹ்வின் இறைநேசரே தங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும், ஸாலிஹீன்களில் உள்ளவரே தங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும், உயிர் தியாகம் செய்தவரே, அல்லாஹ் عَزَّوَجَلَّ எங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும் வரை நீங்கள் தாகத்தைப் பொறுத்தீர்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ உங்கள் மீது கருணை பொழிவானாக! மேலும் உங்களை கொலை செய்தவர்களுக்கு மன்னிப்பு இல்லை. நாளை கியாம நாளில் நரகமே அவர்களின் தங்குமிடமாகும்.” என்று கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு அவர்கள்

அங்கிருந்து சென்று ஒரு கதிரையில் அமர்ந்துக் கொண்டார்கள். சற்று நேரத்துக்குப் பின் இன்னுமொரு மேகம் தோன்றி நிலத்தைத் தொடவே, ஓர் அழைப்பாளர், அல்லாஹ்வின் திருத்தூதர் நூஹ் عَلَيْهِ السَّلَام அவர்களே! தயவு செய்து வாருங்கள். என்று அழைப்பதைக் கேட்டேன். சற்றே மஞ்சள் நிறத்தோற்றத்துடன் கண்ணியமான ஒருவர் இரண்டு சுவனத்தின் ஆடைகளை அணிந்தவர்களாகத் தோன்றி, அவர்களும் அதே வார்த்தைகளைக் கூறிய பின் கதிரையில் அமர்ந்துக் கொண்டார்கள். பின்னர் இன்னுமொரு மேகம் தோன்றியதும், அதிலிருந்து ஹழ்ரத் ஸய்யிதுனா இப்றாஹீம் கலீலுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்கள் வெளியே வந்தார்கள். அவர்களும் அதே வார்த்தைகளைக் கூறிய பின் இன்னுமொரு இருக்கையில் அமர்ந்துக் கொண்டார்கள். அதே போல் ஹழ்ரத் ஸய்யிதுனா மூஸா கலீமுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்களும் ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்களும் வந்து, அதே வார்த்தைகளைக் கூறிய பின் அவர்களும் இருக்கைகளில் அமர்ந்துக் கொண்டார்கள். அதன் பின் அடர்த்தியான மிகப் பெரிய மேகமொன்று தோன்றியது. அதிலிருந்து ஹழ்ரத் ஸய்யிதுனா முஹம்மத் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களும், ஸய்யிததுனா ஃபாத்திமா رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهَا அவர்களும், ஹழ்ரத் ஸய்யிதுனா ஹஸன் முஜ்தBபா رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களும் மேலும் மலக்குகளும் வருகை தந்தார்கள். முதலாவதாக மதீனத்து மாமன்னர்

صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஒளி பொருந்திய அந்த சிரசை நோக்கிச் சென்று, அன்போடு அரவணைத்து, மிகவும் அழுதார்கள். பின்பு ஸய்யிததுனா ∴பாத்திமா رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهَا அவர்களிடம் கையளித்தார்கள். அவர்களும் அதை நெஞ்சில் அரவணைத்து அதிகமாக அழுதார்கள். பின்னர் ஹழ்ரத் ஸய்யிதுனா ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களிடம் வருகை தந்து ஆறுதல் கூறினார்கள்:

اَلسَّلَامُ عَلَى الْوَلَدِ الطَّيِّبِ، اَلسَّلَامُ عَلَى الْخُلْقِ الطَّيِّبِ،
اَعْظَمَ اللهُ اَجْرَكَ وَاَحْسَنَ عَذَاءَكَ فِيْ اِبْنِكَ الْحُسَيْنِ

நற்பேறு பெற்ற என் மகனாரே! உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். பரிசுத்தத்தின் நற்பிறப்பானவர்களே உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். அல்லாஹ் عَزَّوَجَلَّ மாபெரும் நற்கூலிகளைக் கொண்டு உங்களுக்கு அருள் பாலிப்பானாக. மேலும் உங்களின் பேரர் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களுக்காக (அவர்களுக்கு ஏற்பட்ட மாபெரும் சோதனைக்காக) பொறுமையின் உன்னத அந்தஸ் தால் உங்களுக்கு நற்கூலி அருள்வானாக.

இதே போல் ஹழ்ரத் ஸய்யிதுனா நூஹ் நஜிய்யுல்லாஹ் عَلَيْهِ السَّلَام, ஹழ்ரத் ஸய்யிதுனா இப்றாஹீம் கலீலுல்லாஹ் عَلَيْهِ السَّلَام, ஹழ்ரத் ஸய்யிதுனா மூஸா கலீமுல்லாஹ்

عَلَيْهِ السَّلَام, ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்கள் அனைவரும் தமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். பின்பு ஈருலக அருளாளர், கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் சில வார்த்தைகள் பேசினார்கள். அதன்பின் ஒரு மலக்கு கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களது அருகாமையில் வந்து, அBபுல் காஸிமே صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم (இந்த துன்பம் மிகுந்த சம்பவத்தால்) எங்கள் இதயங்கள் சிதறிப் போய் விட்டன. நான் இப்புவியின் வானத்திற்கு சாட்டப்பட்ட மலக்காகும். அல்லாஹ் عَزَّوَجَلَّ தங்களுக்கு அடிபணியுமாறு எனக்கு கட்டளையிட்டுள்ளான். தாங்கள் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم உத்தரவிட்டால் வானத்தை அவர்கள் மீது போட்டு அவர்களை முற்றாக அழித்து விட முடியும் என்று கூறினார். பின்பு இன்னுமொரு மலக்கு வந்து, அBபுல் காஸிமே! صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم நான் கடல்களுக்கு சாட்டப்பட்டுள்ள மலக்காவேன், அல்லாஹ் عَزَّوَجَلَّ தங்களுக்கு அடிபணியுமாறு எனக்கு கட்டளையிட்டுள்ளான். தாங்கள் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم உத்தரவிட்டால் அவர்கள் மீது ஒரு புயலை அனுப்பி அவர்கள் அனைவரையும் முற்றுமுழுதாக அழித்து விட முடியும் என்று கூறினார். அப்போது மதீனத்து மாமன்னர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள், மலக்குகளே! நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறினார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா ஹஸன் முஜ்தBபா رَضِیَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் (நித்திரை கொண்டிருக்கும்

காவலர்களை சுட்டிக் காட்டி) என் அருமைப் பாட்டனாரே! அங்கே நித்திரை கொண்டிருக்கும் மனிதர்கள் தான் என் சகோதரரின் (ஹுஸைன் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ) சிரசைக் கொண்டு வந்தவர்கள், மேலும் இப்போது காவலுக்கும் நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்று கூறினார்கள். மாண்புமிகு பேரரசர் صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள், மலக்குகளே! என் மகனை உயிர் தியாகம் செய்ய வைத்தமைக்காக அவர்களை கொல்லுங்கள், என்று கூறினார்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது சத்தியமாக! என்னுடைய சஹாக்கள் எல்லோரும் ஒரு சில கணங்களில் வெட்டப்பட்டார்கள். பின்பு ஒரு மலக்கு என்னை வெட்டுவதற்காக நெருங்கிய போது, அBபுல் காஸிமே! صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم என்னைக் காப்பாற்றி என் மீது கருணை காட்டுங்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ தங்கள் மீது கருணை காட்டுவான் என்று கத்தினேன். அப்போது பரிசுத்த மாநபி صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் என்னை விட்டு விடும் படி அந்த மலக்கிடம் கூறிவிட்டு என்னருகே வந்து, அந்த ஒளி பொருந்திய சிரசைக் கொண்டு வந்த 70 பேர்களில் நீயும் ஒருவனா? என்று கேட்டார்கள். நான் பணிவோடு, “ஆம்” என்று பதிலளித்தேன். கண்மணி நாயகம் صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் தனது முபாரக்கான கரத்தை என் தோள் மீது வைத்து என்னை நிலத்தில் தள்ளி விட்டு, “அல்லாஹ் عَزَّوَجَلَّ உனக்கு கருணையோ மன்னிப்போ வழங்காதிருப்பானாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ உன் எலும்புகளை நரக நெருப்பில்

எரிப்பானாக.'' என்று கூறினார்கள். இதன் காரணத்தி னால்தான் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் ரஹ்மத் மீது நான் நம்பிக்கை இழந்துள்ளேன் எனக்கூறினான். இதைக் கேட்டவுடன் ஹழ்ரத் ஸய்யிதுனா அல் அ:.மஷ் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், கேடுகெட்டவனே! என்னை விட்டும் விலகிச் செல், இல்லையெனில், உன்னால் என் மீதும் வேதனை இறங்கி விடக்கூடும் என்று கூறினார்கள். (ஷாமே கர்பலா, பக்கம் 267-270)

## புகழ், செல்வத்தின் மீது பேராசை

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! புகழின் மீதும் செல்வத்தின் மீதும் பேராசைக் கொள்வது மோசமான விடயமாகும். எனது நேசத்துக்குரிய எஜமான் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: இரண்டு பசியோடுள்ள ஓநாய்களை ஓர் ஆட்டு மந்தையிலே திறந்து விட்டால் ஏற்படும் நஷ்டத்தை விட, செல்வத்தின் மீதும் பதவியின் மீதுமுள்ள பேராசையால் மனிதன் சன்மார்க்கத்தில் உண்டாக்கிக் கொள்ளும் நஷ்டம் மிகைப்பானதாகும். (ஸுனன் திர்மிதி, பாகம் 4, பக்கம் 166, ஹதீஸ் 2383)

யzஸீத் செல்வத்தின் மீதும் பதவியின் மீதும் வைத்திருந்த மோகமே கர்பலாவின் பயங்கரமான கொடிய துன்பத்திற்கு காரணமாகும். ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் அழிந்திடும் இவ்வுலகத்தின் மீது முற்றாக அக்கறையோ, ஆட்சி அதிகாரம் மீது ஆர்வமோ

கொண்டிராத போதிலும், அவர்கள் அவனை கவிழ்த்து விடுவார்கள் என்று அவன் பயந்தான். உண்மையில் இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُ அவர்கள் அன்று முஸ்லிம்களுடைய இதயங்களின் தலைவராக இருந்தார்கள். இன்றும் உள்ளார்கள், என்றும் அப்படியே இருப்பார்கள்.

## யZஸீதின் பயங்கர முடிவு

ஹழ்ரத் ஹஸன் Bபஸரீ رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَیْه அவர்கள் அறிவித்ததாக மறைமுகமான கருத்துள்ள ஹதீஸ் உள்ளது: حُبُّ الدُّنْيَا رَأْسُ كُلِّ خَطِيْئَةٍ அதாவது உலகாசையே அனைத்து பாவச்செயல்களுக்கும் வேராகும். (அல் ஜாமிஉஸ் ஸகீர் லிஸ்ஸீயூத்தி, பக்கம் 223, ஹதீஸ் 3662 தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

யZஸீதின் உள்ளம் நிலையில்லாத இவ்வுலகின் ஆசையில் மூழ்கியிருந்ததால், புகழ், அதிகாரம் மேலும் ஆதிக்கத்தைப் பெறுவதில் அவன் பேராசைக் கொண்டிருந்தான். தனது முடிவைப் பற்றி மறந்து விட்டு இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُ அவர்களினதும், அவர்களது தோழர்களினதும் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُم கொடிய கொலைகளினால் தன் கரங்களை கறை படியச் செய்துக் கொண்டான். கர்பலாவில் அதிகார ஆசைக்காகவும், ஆதிக்கத்திற்காகவும் அவன் நடாத்திய கொடிய கொலை வெறியாட்டம் அவனது ஆட்சியை நீண்ட காலம் நீடித்து வைக்கவில்லை. 3 வருடம் 6 மாதமே

அவனது கொடிய ஆட்சி நீடித்தது. ஹிஜ்ரி 64 ரபீஉன்நூர் மாதம் சிரியாவின் "ஹம்ஸ்" எனும் நகரில் அமைந்துள்ள ஹவ்வாரீன் என்ற இடத்தில் 39வது வயதில் அவன் இறந்தான். (அல்காமில் ∴பித்தாரீக், பாகம் 3, பக்கம் 464, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

யஸீதின் மரணத்திற்கு சொல்லப்படும் காரணங்களுள் இதுவும் ஒன்று, அதாவது அவன் ஒரு ரோமானிய மங்கையைக் காதலித்தான். ஆனால் அவளோ உண்மையில் இவனை வெறுத்தாள். ஒரு நாள் தந்திரமாக யஸீதை காதலிக்கின்ற நடிப்பில் ஒரு பாழடைந்த பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றாள். அந்த இடத்தில் வீசிய குளிர் காற்று யஸீதுக்கு இச்சையைத் தூண்டிவிட்டது. ஆனால் அம்மங்கையோ இவன் வெட்கங்கெட்டவன், நபி பெருமானாரின் திருப்பேரருக்கு துரோகியாகவும், அவநம்பிக்கையாகவும் நடந்த இவன் ஒரு போதும் தனக்கு நம்பிக்கையாக நடக்கப் போவதில்லை என்றுக்கூறி, யஸீதை குத்து வாளால் திரும்பத் திரும்பக் குத்திவிட்டு அவனை அப்படியே போட்டு விட்டாள். கழுகுகளும் காகங்களும் ஒரு சில நாட்களாக அவனது இறந்த சடலத்தை விருந்துண்டன. அவனது கூட்டத்தினர் அவனைத் தேடித்தேடி இறுதியாக அவனது செத்த சடலத்தைக் கண்டு பிடித்து, ஒரு குழியைத் தோண்டி அழுகிய மீதியைப் புதைத்தனர். (அவ்ராகெ கம், பக்கம் 550)

## இப்னு zஸியாதின் பயங்கர முடிவு

அஹ்லுல் Bபைத்துகளின் படுகொலைகளுக்குப் பக்கத்துணையாக இருந்த யzஸீதின் கூட்டத்தினர் பயங்கரமான முடிவுகளையே அடைந்தனர். யzஸீதுக்குப் பின், கூ∴பாவின் ஆளுனராக இருந்த உபைதுல்லாஹ் இப்னு zஸியாத் என்பவனே மிகக்கொடிய குற்றவாளியாகக் கருதப்பட்டான். அவனது கட்டளையின் பிரகாரமே இமாம் ஹுஸைன் رضی اللہ تعالیٰ عنہ அவர்களும், அவர்களது பரிசுத்த குடும்பத்தினர்களும் رضی اللہ تعالیٰ عنہم சித்திரவதை செய்யப்பட்டார்கள். சரியாக 6 வருடங்களுக்குப் பிறகு (முக்தார் ஸக∴பியின் திட்டமிட்ட பழிவாங்களின் கீழ்) அதாவது, ஹிஜ்ரி 67 முஹர்ரம் 10ல், இப்னு zஸியாத் யூப்ரடீஸ் நதிக் கரையில் வைத்து இப்றாஹீம் Bபின் மாலிக்குடைய படைவீரர்களின் கைகளினால் பயங்கரமாக படுகொலை செய்யப்பட்டான். படைவீரர்கள் அவனது தலையை வெட்டி இப்றாஹீமிடம் ஒப்படைக்க, அவர் அதை கூ∴பாவிலிருக்கும் முக்தாருக்கு அனுப்பி வைத்தார். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 123)

صَلُّوْا عَلَى الْحَبِيْب    صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## இப்னு zஸியாதின் மூக்கினுள் பாம்பு

கூ∴பாவில் ஆளுனர் இல்லம் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டது. ஆறு வருடங்களுக்கு முன் இமாம்

ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ அவர்களின் ஒளி பொருந்திய சிரசு எந்த இடத்தில் வைக்கப்பட்டதோ அதே இடத்தில் இப்னு zஸியாதின் தலையை வைத்து காட்சி படுத்தப்பட்டது. கேடுகெட்ட அவனுக்காக அழுவதற்குக் கூட அங்கு ஒருவரும் இருக்கவில்லை. மாறாக அவனது மரணத்தை கொண்டாடினர். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 123)

இமாராஹ் Bபின் உமைர் அவர்கள் கூறியதாக ஸஹீஹான ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது, உபைதுல்லாஹ் இப்னு zஸியாதின் தலை அவனது கூட்டத்தினர்களின் தலைகளோடு வைக்கப்பட்டபோது, அதனருகே நான் சென்றேன். அப்போது மக்கள் திடீரென, "வந்து விட்டது, வந்து விட்டது" என்று கூச்சலிட்டபோது, ஒரு பாம்பு வருவதைக் நான் கண்டேன். அது எல்லா தலைகளுக்கு மேலாகவும் ஊர்ந்து சென்று இறுதியாக இப்னு zஸியாதின் அழுக்கான மூக்குத் துவாரங்களுக்குள் நுழைந்து, சிறிது நேரத்தின் பின் வெளியாகி மறைந்து விட்டது. மீண்டும் மக்கள், "வந்து விட்டது, வந்து விட்டது" என்று கூச்சலிடத் தொடங்கினர். இதே நிகழ்ச்சி இரண்டு அல்லது மூன்று முறை நடைபெற்றது. (ஸுனன் திர்மிதி, பாகம் 5, பக்கம் 431, ஹதீஸ் 3805)

இப்னு ஸியாத், இப்னு ஸஃத், ஷமர், கைஸ் இப்னு அஷ்அஸ் கன்தி, கௌலி இப்னு யஸீத், சினான் இப்னு அனஸ் நக்ஈ, அப்துல்லாஹ் இப்னு கைஸ், யஸீத் இப்னு மாலிக்

போன்றவர்களும் மேலும் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்களை கொலை செய்கின்ற விடயத்திலே பங்குபற்றிய ஏனைய கேடுகெட்டவர்களும், அதற்காக முயற்சி செய்தவர்களும் பலவிதமான சித்திரவதையின் மூலம் கொலை செய்யப்பட்டார்கள். (ஸவானிஹே கர்பலா, பக்கம் 158)

## தீயச் செயல்கள் தீய முடிவுகளையே கொடுக்கும்

முக்தார் ஸக.்.பி யஸீதிகளைத் தேடித்தேடி துடைத்தெரிந்து விட்டார். உயிர்த் தியாகிகளின் பரிசுத்த இரத்தம் அநியாயக்காரர்களை அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பதையோ, யஸீதின் ஆட்சி பீடம் துண்டுத் துண்டாகச் சிதறும் என்பதையோ, அருள் மிகுந்த இமாம் அவர்களின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் கொடூரமாகக் கொல்லப்படுவார்கள் என்பதையோ அறிந்திருக்கவில்லை. அதே யூப்ரடீஸ் நதிக்கரையில், ஆஷூரா தினத்தில் அதே போன்ற அடக்கு முறையாளர்களால் முக்தாரின் குதிரைகள் தம்மை மிதித்துக் கொண்டு செல்லும், அவர்களின் பெரும்பான்மை அவர்களுக்குப் பயனளிக்காது, அவர்களின் கைகளும் கால்களும் வெட்டப்படும், வீடுகள் சூறையாடப்பட்டு, அவர்கள் தூக்கில் தொங்க விடப்படுவார்கள், பிணங்கள் அழுகி, மக்கள் அவர்களை வெறுப்பார்கள், மக்கள் குதூகலித்து அவர்களது மரணத்தைக் கொண்டாடுவார்கள், யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கில்

இருந்தவர்கள் கோழைகளாகி ஓட்டம் பிடிப்பார்கள், நாய்களையும், எலிகளையும் போல் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சக்தியற்றவர்களாய் தவிப்பார்கள், கண்ட இடங்களிலெல்லாம் கொல்லப்படுவார்கள், இவ்வுலகிலும் கியாமநாளின் போதும் வெறுத்தொதுக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் அவர்கள் அறிந்திருக்கவில்லை. (ஸவானிஹே கர்பலா, பக்கம் 125)

## முக்தார் தனக்கு நபித்துவம் இருப்பதாக பிதற்றிக் கொண்டார்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! தன்னைப்பற்றி அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மறைமுக செயலில் என்ன உள்ளது என்பது எவருக்கும் தெரியாது. இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களின் கொலையாளிகள் அனைவரையும் முக்தார் ஸக.:.பி கொன்றொழித்து, இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களுடைய நேசர்களின் இதயங்களை வென்றெடுத்த போதிலும், அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த விதி அவனை வந்தடையவே செய்தது. அவன் தனக்கு நபித்துவம் இருப்பதாகவும், வஹி வருவதாகவும் கூறிக்கொண்டான். (அஸ் ஸவாஇகுல் முஹர்ரகா, பக்கம் 198)

**சந்தேகம்:** அஹ்லுல் பைத்துக்களின் மீது இந்தளவு நேசம் வைத்த ஒருவர், வழிகெட்ட முர்தத்தாக (மார்க்கத்தைக் கைவிட்டவர்) எவ்வாறு ஆகிவிட்டார்? இத்தகைய பெரிய

செயல்களைச் செய்வதற்கு ஒரு போலி நபிக்கு ஆற்றல் இருக்குமா?

**சந்தேக நிவர்த்தி:** அல்லாஹ் عَزَّوَجَلَّ தேவையற்றவன். அவனது மறைவான திட்டத்தை நாம் பயப்பட வேண்டும். ஏனெனில் எங்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்பது நமக்குத் தெரியாது! ஷைத்தான் மிகப்பெரிய அறிஞனாகவும், துறவியாகவும் இருந்தான். ஆயிரக்கணக்கான வருடங்கள் அல்லாஹ் عَزَّوَجَلَّ வை வணங்கினான். ஆனால் அவனது விதி அவனை வந்தடைந்தது. அவன் சபிக்கப்பட்டு கா∴பிரானான். “Bபல்அம் பின் Bபாஊரா” என்பவனும் மிகப்பெரிய அறிஞனாகவும், துறவியாகவும் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுபவனாகவும் இருந்தான். அவனுக்கு இஸ்முல் அ∴லமுடைய அறிவு இருந்தது. அவனுடைய ஆத்மீகத் தன்மையின் மகத்துவத்தால் அர்ஷீல் அஹ்லத்தை (தெய்வீக அரியாசனத்தை) காணக்கூடிய ஆற்றல் பெற்றவன். ஆனால் அவனது விதி அவனை வந்தடைந்ததும் அவன் ஈமானற்று மரணித்ததோடு, ஒரு நாயின் உருவத்தில் நரகில் நுழைவான். “இப்னு ஸகா” என்பவன் மிக்க அறிவுக் கூர்மையுள்ள ஞானவான்களில் ஒருவனாகவும், வாதாடும் வல்லமை பெற்றவனாகவும் இருந்தான். ஆனால் அவனது காலத்திலிருந்த கௌஸ் அவர்களோடு மரியாதைக் குறைவாக நடந்துக் கொண்டான். இறுதியில் அவன் ஒரு கிறிஸ்தவ இளவரசியின் மீது காதல் கொண்டு, கிறிஸ்தவ மதத்தைத் தழுவி இழிவாக மரணித்தான்.

அல்லாஹ் عَزَّوَجَلَّ அவனது நேசத்துக்குரிய ரஸூல் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுக்கு வஹீ அறிவித்தான், அதாவது நான் யஹ்யா பின் zஸகரிய்யா (عَلَيْهِمَاالسَّلَام) அவர்களின் கொலைக்குப் பதிலாக எழுபதாயிரம் பேரை கொன்றேன். உங்களின் பேரருக்காக அதைவிட இரண்டு மடங்கு கொல்லுவேன். (அல் முஸ்தத்ரக் லில்ஹாகிம், பாகம் 3, பக்கம் 485, ஹதீஸ் 4208)

வரலாறு சான்றாகும்: அதாவது ஸய்யிதுனா யஹ்யா பின் zஸகரிய்யா عَلَيْهِمَاالسَّلَام அவர்களை அநியாயமாகக் கொலை செய்தவர்களைப் பழி தீர்ப்பதற்காக, தன்னையே இறைவன் என்று கூறிக்கொண்ட ஓர் அடக்கு முறையாளனாகிய Bபக்தே நஸ்ர் என்பவனை அல்லாஹ் عَزَّوَجَلَّ நியமித்தான். அதேபோல் இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களை அநீதியாகப் படுகொலை செய்தவர்களைப் பழி தீர்ப்பதற்காக முக்தார் ஸக:.பி போன்ற பொய்யனை நியமித்தான். (ஷாமே கர்பலா, பக்கம் 285)

அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் திட்டங்களை அவன் மாத்திரமே அறிவான். அவனது தனிப்பட்ட விருப்புக்கு அமைவாகவே அநியாயக்காரர்களைக் கொண்டு அநியாயக்காரர்களை அழித்தொழிக்கிறான். அதாவது, 8ம் ஜுஸ்உ, சூரதுல் அன்ஆம் 129வது திருவசனத்திலே கூறப்பட்டுள்ளது:

وَكَذٰلِكَ نُوَلِّيْ بَعْضَ الظّٰلِمِيْنَ بَعْضًا بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿١٢٩﴾

தர்ஜிமா கன்zஸுல் ஈமான்: இன்னும் இது போலவே சில அநியாயக்காரர்களை சிலரின் மேல், அவர்கள் செய்து வந்த செயல்கள் காரணமாக சாட்டுகிறான். (ஜீஸ்உ 8, சூரதுல் அன்ஆம் ஆயத் 129) நேசத்துக்குரிய மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியுள்ளார்கள்: நிச்சயமாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ வரம்பு மீறிய ஒரு பாவியைக் கொண்டும் கூட இஸ்லாத்திற்கு உதவி கிடைக்கச் செய்வான். (ஸஹீஹ் புகாரி, பாகம் 2, பக்கம் 328, ஹதீஸ் 3062, தாருல் குதுபுல் இல்மிய்யா பேரூத்)

## அல்லாஹ்வின் மறைமுக திட்டங்கள் குறித்து அச்சம் கொள்ள வேண்டும்

அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மறைமுக திட்டங்கள் குறித்து நாம் எந்நேரமும் அச்சத்தோடு இருக்க வேண்டும். எங்களுடைய அறிவு, புகழ், உடற்பலம், பட்டம் பதவி இவைகளைப் பற்றி பெருமைக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அல்லாஹ் عَزَّوَجَلَّ எங்களுக்கு என்ன முடிவை விதித்து வைத்திருக்கிறான் என்பது எங்களுக்குத் தெரியாது. எனவே பீற்றித்திரிவதையும், பெருமை பேசுவதையும் தவிர்த்துக் கொள்வது மிக்க அவசியமாகும். ஈமானை இழந்து விடும் அபாய நிலையைப் பற்றி நாம் எப்போதும் பயப்பட வேண்டும். ஈமானைப் பெறுவதற்கான உளப்பாங்கை விருத்தி செய்துக் கொள்வதற்காகவும், நேசத்துக்குரிய நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

அன்னவர்கள் மீதும், அன்னவர்களின் அருமை ஸஹாபாக்கள், பரிசுத்த குடும்பத்தினர்கள் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُم மீதிலும் உண்மையான முஹBப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், சன்மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ளவும், பாவங்களை விட்டும் விலகி நன்மைகளை அதிகமாக்கிக் கொள்ளவும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களும் ரசூலுல்லாஹ் صَلَّی اللهُ تَعَالٰی عَلَیۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுடைய நேசர்களுடன் ஒவ்வொரு மாதமும் குறைந்தது 3 நாட்கள் மதனி கா∴பிலாவில் பிரயாணம் செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு இஸ்லாமிய சகோதரர்களும் 72 மதனி இன்ஆமாத் பிரகாரமும், ஒவ்வொரு இஸ்லாமிய சகோதரிகளும் 63 மதனி இன்ஆமாத் பிரகாரமும் அமல் செய்து, தினமும் ∴பிக்ரே மதீனாவின் மூலம் அதனை நிரப்பி உங்கள் பிரதேச பொறுப்புதாரியிடம் ஒப்படைத்து வாருங்கள்.

யா அல்லாஹ் عَزَّوَجَلَّ உன்னுடைய நேசராம் ரசூல் صَلَّی اللهُ تَعَالٰی عَلَیۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களதும், அன்னவர்களுடைய ஸஹாபாக்கள் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُم மேலும் இமாம் ஹுஸைன் رَضِیَ اللهُ تَعَالٰی عَنۡهُ அவர்களதும், அவர்களது கர்Bபலா உயிர் தியாகிகள் அனைவரதும் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُم பொருட்டைக் கொண்டு எங்களது ஈமானைப் பாதுகாத்தருள்வாயாக. கப்ரிலும், கியாம நாளிலும் பாதுகாப்பு வழங்கி, கேள்வி கணக்கின்றி மன்னிப்பையும் வழங்கி விடுவாயாக. யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! நம்மை மதீனா முனவ்வராவில் பச்சை

குBப்பா (Gகும்Bபதே கZஸ்ரா) வின் நிழலிலே மஹ்Bபூப் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் ஜல்வாவில் ஈமானோடும், ஆ.:.பியத்தோடும் ஷஹீதாக்கி, ஜன்னதுல் பகீ.:.யில் அடக்கம் பெற்று, ஜன்னதுல் பிர்தௌஸிலே உனது மதனீ ஹBபீப் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அயல் வீட்டாளனாக இருக்கும் பாக்கியத்தை தந்தருள்வாயாக.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

## ஆஷூராவின் சிறப்புக்கள்

**“கர்பலாவின் ஷுஹதாக்களே கஷ்டங்கள் நீங்கவேண்டும்”** என்பதிலுள்ள இருபத்தைந்து எழுத்துக்களின் தொடர்பில் ஆஷூராவின் 25 முக்கிய நிகழ்வுகள்

1. முஹர்ரமுல் ஹராம் மாதத்தின் 10ம் பிறை, ஆஷூரா நாளில், ஹழ்ரத் ஸய்யிதுனா ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்களின் தௌபா ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. அதே தினத்தில் தான் ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்கள் பிறந்தார்கள்.

3. அதே தினத்தில் தான் அவர்களை சுவர்க்கத்தில் நுழைய வைக்கப்பட்டது.

4. அதே தினத்தில் தான் அர்ஷ் (5) குர்ஸீ (6) வானம் (7) பூமி

8. சூரியன் (9) சந்திரன் (10) நட்சத்திரங்கள் (11) சுவர்க்கமும் படைக்கப்பட்டன.

12. அதே தினத்தில் ஹழ்ரத் இப்றாஹீம் عَلَيْهِ السَّلَام அவர்கள் படைக்கப்பட்டார்கள்.

13. அதே தினத்தில் அவர்கள் நெருப்பிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள்.

14. அதே தினத்தில் ஹழ்ரத் மூஸா கலீமுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்களுக்கும், அவர்களது உம்மத்தினர்களுக்கும் வெற்றி கிடைத்ததோடு, ∴பிர்அவ்ன் அவனது கூட்டத்தினரோடு மூழ்கடிக்கப்பட்டான்.

15. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلَيْهِ السَّلَام அவர்கள் பிறந்தார்கள்.

16. அதே தினத்தில் அவர்கள் عَلَيْهِ السَّلَام வானத்தளவிலே உயர்த்தப்பட்டார்கள்.

17. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா நூஹ் عَلَيْهِ السَّلَام அவர்களுடைய கப்பல் ஜூதி எனும் மலையில் தரிப்பட்டது.

18. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா சுலைமான் عَلَيْهِ السَّلَام அவர்களுக்கு மாபெரும் ஆட்சி அதிகாரம் அருளப்பட்டது.

19. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா யூனுஸ் عَلَيْهِ السَّلَام அவர்கள் மீனின் வயிற்றிலிருந்து வெளியாக்கப்பட்டார்கள்.

20. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா ய∴கூப் عَلَيْهِ السَّلَام அவர்களது கண்பார்வை மீண்டும் வந்தது.

21. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா யூஸு∴ப் عَلَيْهِ السَّلَام அவர்கள் ஆழமான கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

22. அதே தினத்தில் ஹழ்ரத் ஸய்யிதுனா ஐயூப் عَلَيْهِ السَّلَام அவர்கள் தங்களின் நோயை விட்டும் நிவாரணம் பெற்றார்கள்.

23. அதே தினத்தில் தான் வானிலிருந்து முதன் முதலாக மழைப் பொழிந்தது.

24. இந்நாளின் நோன்பு உம்மத்தினர்களில் பிரபல்யமாக இருந்தது. எதுவரையென்றால், கூறப்பட்டுள்ளது: ரமழானுடைய நோன்பு கடமையாவதற்கு முன்னால் இந்நாளில் நோன்பு நோற்பது கடமையாக இருந்தது. பின்னர் அது ரத்து செய்யப்பட்டது. (முகாஷ.ஃ.பதுல் குலூப், பக்கம் 311)

25. இதே ஆஷூரா தினத்திலேயே ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்களும், அவர்களது குமரர்களும், தோழர்களும் தொடர்ந்து மூன்று நாட்கள் பசியில் போடப்பட்டதன் பின் கர்பலா வெளியிலே கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார்கள்.

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

### “كربلا” என்பதிலுள்ள ஐந்து எழுத்துக்களின் தொடர்பில் முஹர்ரம், ஆஷூரா நோன்புகளின் 5 சிறப்புக்கள்

**மதீனா 1:** கண்மணி நாயகம், ரஸூலே அக்ரம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூஹுரைரா رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ரமழானுக்குப்

பிறகு, முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பே மகத்துவம் மிக்கது. மேலும் ஃபர்ழான தொழுகைகளுக்குப் பிறகு ஸலாதுல் லைல் (இரவு நேரத்தின் நஃப்ல் தொழுகை) மகத்துவம் மிக்கது. (ஸஹீஹ் முஸ்லிம், பக்கம் 891, ஹதீஸ் 1163)

**மதீனா 2:** அல்லாஹ்வின் இனிய தூதர், நபிமார்களின் தலைவர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், முஹர்ரம் மாதத்தில் நோற்கும் ஒவ்வொரு நோன்பும், ஒரு மாதத்தின் நோன்புக்கு சமமாகும். (தபரானி ஃபிஸ் ஸகீர், பாகம் 2, பக்கம் 87, ஹதீஸ் 1580)

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## ஆஷூராவின் நோன்பு

**மதீனா 3:** ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு அBப்பாஸ் رَضِیَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பரிசுத்த மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஆஷூரா நாளிலும், ரமழான் மாதத்திலும் ஆர்வத்துடன் நோன்பு நோற்று சிறப்பித்ததை, வேறு எந்த நாளிலும் நான் கண்டதில்லை. (ஸஹீஹ் புகாரி, பாகம் 1, பக்கம் 657, ஹதீஸ் 2006)

## யூதர்களுக்கு மாற்றம் செய்யுங்கள்

**மதீனா 4:** பரிசுத்த மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள். ஆஷூரா நாளில் நோன்பு நோற்றுக்

கொள்ளுங்கள். ஒரு நாள் மேலதிகமாக, முன்னால் அல்லது பின்னால் சேர்த்து நோன்பு நோற்று யூதர்களுக்கு மாற்றம் செய்யுங்கள். (முஸ்னத் இமாம் அஹ்மத், பாகம் 1, பக்கம் 518, ஹதீஸ் 2154)

ஆஷூரா நோன்பை நோற்கும் போது, முஹர்ரம் மாதத்தின் 9வது அல்லது 11வது நாளின் நோன்பையும் மேலதிகமாக நோற்றுக் கொள்வதே சிறப்பானது.

**மதீனா 5:** ஹழ்ரத் ஸய்யிதுனா அBபூ கதாதா رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மக்கத்து மாமன்னர், மதீனத்து மாவேந்தர் صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: ஆஷூராவுடைய நோன்பு முன்னைய ஒரு வருடத்தின் பாவங்களை நீக்கி விடுகிறது என்பதை அல்லாஹ் عَزَّوَجَلَّ விடமிருந்து எதிர் பார்க்கிறேன். (ஸஹீஹ் முஸ்லிம், பக்கம் 590, ஹதீஸ் 1162)

## முழு வருடமும் கண் வலியோ, நோயோ ஏற்படாது

மு.ஃ.பஸ்ஸிரே ஷஹீர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் மு.ஃ.ப்தி அஹ்மத் யார்கான் நஃமீ رَحْمَۃُ اللّٰہِ تَعَالٰی عَلَیْہ அவர்கள் கூறியுள்ளார்கள்: ஒருவர் முஹர்ரம் மாதத்தின் 9,10 ஆகிய தினங்களில் நோன்பு நோற்றால் அவர் மாபெரும் நற்கூலிகளைப் பெற்றுக்கொள்வார். முஹர்ரம் 10ம் நாள் தன் குடும்பத்தினர்களுக்கு நல்ல உணவை சமைத்துக்

கொடுத்தால் اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ முழு வருடமும் அவருடைய வீட்டிலே பரகத் பொழியும். ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் ஹுஸைன் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُ அவர்களுக்கு ஒரு ஃபாத்திஹா ஓதி விட்டு கிச்டா ஆக்குவது சிறப்பானது. (இது நற்பலன் தந்துள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது)

இந்நாளில் அதாவது முஹர்ரம் 10ல் ஒருவர் குளித்தால் اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ முழு வருடமும் நோய்களை விட்டும் அவர் பாதுகாக்கப்படுவார். ஏனெனில் இந்நாளில் zஸம்zஸம் நீர் எல்லா நீர்களோடும் சேர்கிறது. (தஃப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 4, பக்கம் 142 கொயிடா - இஸ்லாமி zஸிந்தகீ, பக்கம் 93)

ஈருலக அருளாளர், கண்மணி நாயகம் صَلَّى اللّٰہ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், ஆஷூரா தினத்தில் யாரொருவர் இஸ்மித் சுருமாவை தன் கண்களுக்கு இட்டுக் கொள்கிறாரோ அவருடைய கண்கள் ஒரு போதும் வலியினால் பாதிக்கப்பட மாட்டாது. (ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 367, ஹதீஸ் 3797)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

تُوبُوا اِلَى الله اَسْتَغْفِرُ الله

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## MAKTABA-TUL-MADINAH

**UK:** 80-82 Bordesley Green Road, Birmingham, B9 4TA.
Contact #: 07989996380 - 07867860092
Email: uk@dawateislami.net

**USA:** Faizan-e-Madina, P. O. Box 36216, Houston, Tx 77274.
Contact #: +713-459-1581, 832-618-5101

**INDIA:** 19/20 Muhammad Ali Road, Opposite Mandvi Post Office Mumbai - 400 003. Contact #: +91-022-23454429

**BANGLADESH:** K.M Bhovan, 1st Floor, 11, Andar Killa Chittagong.

**HONG KONG:** Faizan-e-Madina, M/F-75, Ho Pui Street, Tsuen Wan N.T. Contact #: +85-98750884 – 31451557

**SOUTH AFRICA:** 61A, Mint Road, Fordsburg, Johannesburg.
Contact #: 011-838 9099

**KENYA:** Kanz-ul-Iman, Near Al-Farooq Hospital, Tonoka Area Mvita, Mombasa. Contact #: +254-721-521916

**TORONTO CANADA:** 1060 Britannia Road Unit 20, 21 Mississauga ONT Canada. Contact #: +141-664-82261

**MOZAMBIQUE:** Mesquita Faizan-e-Madina Rua Alfredo Lawley, Esturro, Beira. Contact #: 00258-848554888 - 00258-822808580

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ


# ஸுன்னத்துக்களின் வசந்தங்கள்


அல்ஹம்துலில்லாஹ் عَزَّوَجَلَّ அல்-குர்ஆனையும் சுன்னத்துக்களையும் போதிக்கின்ற அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் அரசியல் சார்பற்ற உலகளாவிய அமைப்பான "த஼ஃவதே இஸ்லாமி" யின் நறுமணம் கமழும் மதனி சூழலில் அதிகமான சுன்னத்துக்களை கற்றுக்கொள்ள, கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வியாழக்கிழமை பின்னேரமும் இல. 10, மெஸன்ஜர் வீதி, கொழும்பு 12 இல் அமைந்துள்ள ஃபைஸானே மதீனாவில் மஃரிப் தொழுகையை தொடர்ந்து நடைபெறுகின்ற ஸுன்னத்துக்கள் நிறைந்த இஜ்திமாவில் ஆரம்பம் முதல் இறுதிவரை கலந்துகொண்டு அதிகமாக நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நேசர்களுடன் மதனி காஃபிலாக்களில் ஸுன்னத்துக்களை கற்றுக்கொள்ள பிரயாணம் செய்யுங்கள். நீங்கள் நல்லொழுக்கமுள்ள முஸ்லிம்களாக மாறுவதற்காக வேண்டி "மக்தபதுல் மதீனா" எனும் தஃவதே இஸ்லாமியின் நூல் நிலையத்திலிருந்து "மதனி இன்ஆமாத்" எனும் பதிவேட்டை ஒவ்வொரு இஸ்லாமிய மாத ஆரம்பத்திலும் பெற்று அதன் பிரகாரம் அமல் செய்து தினமும் ஃபிக்ரே மதீனா (அமல்களின் மீது கண்ணோட்டம்) செய்தவாறே அதனை நிரப்பி ஒவ்வொரு இஸ்லாமிய மாத முடிவிலும் அதனை உங்கள் பிரதேச தஃவதே இஸ்லாமியின் பொறுப்புதாரியிடம் ஒப்படைத்து வாருங்கள். இன்ஷா அல்லாஹ் இதனுடைய பரக்கத்தை கொண்டு ஃபர்ளுகள், வாஜிபுகள் மற்றும் ஸுன்னத்துக்களை பேணி நடக்கவும், பாவமான காரியங்களை வெறுத்தொதுக்கவும் ஈமானை பாதுகாத்து உறுதிப்படுத்தவும் உற்சாகமும் உறுதியும் ஏற்படுவதை காணலாம்.

ஒவ்வொரு இஸ்லாமிய சகோதரர்களும் **"நான் என்னையும், உலக மக்கள் அனைவரையும் சீர்திருத்த முயற்சி செய்வேன்"** இன்ஷா அல்லாஹ் عَزَّوَجَلَّ! எனும் மதனி (நல்) நோக்கத்தை தன்னுடைய நோக்கமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். தனது சீர்திருத்தத்திற்காக "மதனி இன்ஆமாத்" பிரகாரம் அமல் செய்வதன் மூலமும் உலக மக்களின் சீர்திருத்தத்திற்காக "மதனி காஃபிலாவில் பிரயாணம் செய்வதன் மூலமும் மேற்குறித்த மதனி நோக்கத்தை பூர்த்தி செய்யலாம்.





ISBN 978-969-579-632-0
0109607

மக்தபதுல் மதீனா
தஃவதே இஸ்லாமி

இல. 10, மெஸன்ஜர் வீதி, கொழும்பு-12, இலங்கை.
தொலைபேசி: +94 (11) 2394748/9
E-mail: maktaba@dawateislami.net
Web: www.dawateislami.net